விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 24
ஒலி 167 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை (04.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தையிட்டி விகாரையை அகற்றக்கோரி நேற்றும் முன்னணி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றக் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் 3வது கட்டமாக நடத்தப்படும் போராட்டத்தின் நான்காம் நாள் போராட்டம் நேற்று இடம் பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் 19

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு நால்வர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்கு நான்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் எதிர் வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் 19

## 400 ரூபாயால் லிட்ரோ எரிவாயு விலைக்குறைப்பு

(கொழும்பு)

12.5 கிலோ கிராம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 400 ரூபாயினால் குறைவடைந்துள்ளது.

இன்று நள்ளிரவு முதல் குறித்த விலை திருத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என 19

# தேர்தலை விட நாட்டை மீட்பதே முக்கியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(நுவரெலியா)

தேர்தலுக்காக ஒன்றுபடுவதைவிடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தற்போது இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் 19

## படகு மோதியதில் குடும்பஸ்தர் பலி

(கரணவாய்)

படகு மோதியதாக தெரிவித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பள்ளிமுனை, மன்னாரைச் சேர்ந்த இராமசந்திரன் வசந்தகுமார் (வயது-44) என்பவராவார்.

மன்னாரைச் சேர்ந்த அவர் வடம 19

## எரிபொருள் விநியோகம் இன்று வழமைக்கு திரும்பும் - கஞ்சன

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனம் ஆகியவை நாடளாவிய ரீதியில் தொடர்ந்து எரிபொருளை விநியோகித்து வருவதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று அவ்ரதனதுடுவிட்டர் பதிவொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இன்று அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் போதுமான எரிபொருள் இருப்புக்கள் இருக்கும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், எரிபொருள் ஓடர்கள் 19

## பெற்றோரின் கண்காணிப்பு சிறுவர்கள் மீது இல்லை

### யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

பெற்றோரின் முறையான கண்காணிப்பு சிறுவர்கள் மீது இல்லாத காரணத்தாலும், அக்கறையின் மையினாலுமே 80 வீதமான சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் இடம்பெற்றுள்ளதென யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார். 19

## இந்திய ரயில் விபத்து



03

## கிளிநொச்சியில் 3 ஷெல்கள் மீட்பு



(கிளிநொச்சி)

தருமபுர பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் வெடிக்காத நிலையில் 3 19

VILLAGE HOTEL Jaffna
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL JAFFNA எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்
(15799)
077 544 8503

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டை கட்டியெழுப்புவதற்கு பதிலாக அரசாங்கம் மக்களை ஒடுக்குகிறது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நமது நாடு வளமான நாடாக இருந்தாலும், தற்போது வங்குரோத்து நிலையை அடைந்து விட்டதாகவும், இந்த வங்குரோத்தில் இருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்குப் பதிலாக, தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி வருவதாகவும், வட்டி விகிதங்களை அதிகரிப்பதன் மூலம் வியாபாரங்களையும் அரசாங்கம் முடக்கி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம், அரலகங்வில தம்மின்ன பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

நாடு இவ்வாறான நிலையில் இருக்கும் போது தற்போதைய அரசாங்கம் பல்வேறு சட்டதிட்டங்கள் ஊடாக நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறிவருவதாகவும், தற்சமயம் உண்மையை மக்களிடம் கொண்டு செல்லும் சுதந்திர ஊடக நிறுவனங்கள் கூட அடக்குமுறைக்குட்படுத்த சட்டங்களைக் கொண்டு வருவதாகவும், அச்சட்டங்களின் ஊடாக தம்மை விமர்சிக்கும் ஊடக நிறுவனங்களை ஒடுக்க முயற்சித்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

புதிய சட்டங்கள் மூலம் மக்களை பயங்கரவாதிகளாக முத்திரை குத்தவும் தயாராகி வருவதாகவும், இந்த சட்ட மூலங்கள் மூலம் மக்களுக்கு அதிகபட்ச இடையூறுகளை பிரயோகிக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டை வீழ்ந்த இடத்தில் இருந்து மீட்க நடவடிக்கை எடுக்காத இந்த அரசாங்கம் நாளுக்கு நாள் மக்களை ஒடுக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் இந்நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும் எனவும் எதிர்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார். (4.7)

## வற்றாப்பளை பொங்கல் உற்சவம் பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்கள்

வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு - வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நாளை நடைபெறவுள்ளது.

இன்று முல்லைத்தீவு - முள்ளியவளை காட்டா ஆலய விநாயகர் பொங்கலும் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு பொலிஸார் முக்கிய அறிவித்தல் ஒன்றை பொதுமக்களுக்கு விடுத்துள்ளனர்.

அதாவது வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கலுக்கு செல்வோர் தமது தங்க ஆபரணங்களை மிகவும் கவனமாக வைத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முடிந்தவரை தங்க ஆபரணங்களை அணிந்து கோயிலுக்கு வருவதை தவிர்த்துக்கொள்ளும்படி மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மற்றும் உங்கள் வீடுகளில் யாரவது ஒருவரை பாதுகாப்புக்காக இருக்க வைத்துவிட்டு பொங்கலுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மற்றும் இரவு நேரங்களில் தூர இடங்களில் இருந்து செல்வோர் மிக கவனமாக இருக்கும் படியும், பாதுகாப்பாக பெற்றோர் அல்லது சகோதரர்கள் துணையுடன் செல்லும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

எனவே பொதுமக்களாகிய நாங்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது சிறந்ததாகும் என தெரிவித்துள்ளனர். (4-7)

## பருத்தித்துறையில் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறையில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட இடத்திற்கு அருகிலுள்ள வீடொன்றின் உரிமையாளர் மீது இனந்தெரியாத நபர்கள் வாள் வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பருத்தித்துறை 3ஆம் குறுக்கு தெருவை சேர்ந்த சுப்பிரமணியம் சுகுமார் (வயது 50) என்பவர் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்கு தெருவை சேர்ந்த தியாகராசா சந்திரதாஸ் (வயது 33) எனும் இளைஞன் கடந்த 28ஆம் திகதி அவரது வீட்டுக்கு அருகில் உள்ள மூன்றாம் குறுக்கு தெருவில் உள்ள சுகுமார் என்பவரின் வீட்டுக்கு வெளியே அதிகாலை வேளை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் சுகுமாரின் வீட்டினுள், அத்துமீறி நுழைந்த மூவர் கொண்ட குழு சுகுமார் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இளைஞனின் சடலம் மீட்கப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் வன்முறை கும்பல் புகுந்து தாக்குதல் நடாத்தி உள்ளமை பொலிஸாருக்கு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4.7)

# மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 10 . 1966

இறப்பு 31 . 05 . 2023

### திருமதி செல்வம் ஜெயக்குமாரி (ஜெயா)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் ஜேர்மனியில் வசித்து வந்தவருமான திருமதி செல்வம் ஜெயக்குமாரி (ஜெயா) கடந்த 31.05.2023 அன்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து பசுபதி - விஜயலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற நன்னியன் - சீனி நாகி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் சீனி - செல்வத்தின் அன்பு மனைவியும் லக்சுமியின் அன்புத் தாயாரும் கனகராசா (ரவி - ஆசிரியர்), இரத்தினராசா (சேகர்), ஆனந்தராசா (ஜோச்), சந்திரன் பிறேமகுமாரி (பிறேமா - முன்பள்ளி ஆசிரியை), விஜயகுமாரி (யாழினி), இராஜகுமாரி (ஜெசிந்தா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் முத்துலிங்கம், தேவராஜா, ஜெயராஜா, மல்லிகாராணி, பவளராணி, பராசத்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No.11, முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே: 021 222 8017

## டெங்கு தொற்றாளர்கள் சடுதியாக அதிகரிப்பு

### தொற்றுநோயியல் பிரிவு

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக தொற்றுநோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

2023 இல் பதிவாகியிருந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 40,000 ஐத் தாண்டியுள்ளதுடன் தொடர்ந்தும் இலங்கை டெங்கு நோய்த்தாக்க அபாயத்திலிருந்து வெளியேறவில்லை எனவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

தொற்றுநோயியல் பிரிவின் அறிக்கையின்படி, 2023 இல் இதுவரை மொத்தம் 40,206 பேர்வரை டெங்கு நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 8,970 பேர் டெங்கு நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மேல் மாகாணத்தில் 20,000 க்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாகாணங்களின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை மிக அதிகமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், டெங்குப் பரவலைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதுடன், நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்குமாறும், சுகாதாரத்துறை அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த, 1988 அவிட்டம் (4ஆம் பாதம்), கிரக பாவம் 53, செவ்வாய் குற்றமற்ற HND எஞ்சினியரிங் படித்து தனியார், தொழில் புரியும் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. (15750)

**077 311 6279**

## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15840)

**076 733 6047**
**076 755 8606**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இந்தியா ரயில் விபத்து

# 300 ஐ அண்மிக்கும் பலி எண்ணிக்கை!

(டில்லி)

**இந்தியா ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் பயணிகள் ரயில் தடம் புரண்டு சரக்கு ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 280 ஐ தாண்டியுள்ளது என்று ஒடிசா தலைமை செயலாளர் பிகே ஜெனா தெரிவித்துள்ளார்.**





கிட்டத்தட்ட 900 இற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹவுராவிலிருந்து சென்னை நோக்கி புறப்பட்ட கோரமண்டல் எக்ஸ்பிரஸ் புகையிரதம் யஷ்வந்பூர்- ஹவுரா அதிவேக எக்ஸ்பிரஸ் புகையிரதத்துடன் மோதி பெரும் விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் 18 இற்கும் அதிகமான புகையிரத பெட்டிகள் கவிழ்ந்து இருப்பதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் தேசிய பேரிடர் மீட்பு படையினர், ஒடிசா மாநிலத்துக்கான அவசரகால பேரிடர் விரைவு படை, தீயணைப்பு துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது. (4)

## இவ்வருடம் ரூபாவின் பெறுமதி 24.2 வீதத்தால் அதிகரிப்பு

### மத்திய வங்கி தகவல்

(கொழும்பு)

இந்த வருடத்தில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 24.2 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையின்படி, இலங்கை ரூபா ஜப்பானிய யெனுக்கு எதிராக 30 வீதத்தாலும் பிரித்தானிய பவுண்டிற்கு எதிராக 19.4 வீதத்தாலும் மிகைப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யூரோவுடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி 23 வீதமும் இந்திய ரூபாயுடன் ஒப்பிடுகையில் 23.5 வீதமும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## மூன்றாம் தரப்பின் கியூ.ஆர் பயன்படுத்துவோருக்கு சிக்கல்

(கொழும்பு)

எரிபொருளை பெற்றுக் கொள்ள பிறரது QR குறியீடுகளைப் பயன்படுத்தும் நபர்கள் சம்பந்தப்பட்ட சமீபத்திய மோசடி குறித்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

எனவே எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அச்சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார்.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை என அமைச்சர் உறுதியளித்த நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நாடளாவிய ரீதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

## விபத்து; இருவர் பலி

(கொழும்பு)

அனுராதபுரம், சாலியவெவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் - திருகோணமலை A12 வீதியில் சாலியவெவ பகுதியில் அனுராதபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், கன்டெய்னர் ட்ரக்கை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர் திசையில் பயணித்த கெப் வண்டியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் நொச்சியாகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 21 மற்றும் 22 வயதுடைய திம்பிரிகஸ்கடுவ மற்றும் ஹொரேகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சடலங்கள் நொச்சியாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

கெப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், சாலியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## கடன் அட்டைகளின் வட்டி வீதம் குறைவடையும் சாத்தியம்

### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

இலங்கையில் கடன் அட்டைகளின் வட்டி வீதமும் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் அனைத்து கடன் அட்டைகளுக்கான வட்டி வீதங்களும் குறைவடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி வட்டி வீதத்தை குறைத்துள்ளதால், கடன் அட்டைகளின் வட்டி வீதத்தை குறைக்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

## 440 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

பொசன் போயா தினத்தை முன்னிட்டு 440 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இதன்படி 434 ஆண் கைதிகளும் ஆறு பெண் கைதிகளும் விடுவிக்கப்படவுள்ளனர். (4)

### எதிர்வரும் ஜனவரி முதல்

## 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு வரி கணக்கு கட்டாயம்

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வருமானவரி திணைக்களத்தில் வரிக் கணக்கினை திறப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

18 வயதுக்கு மேற்பட்ட தனிநபர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டுமென்பது அவர்களுக்கு வரி அறவிடப்படும் என்பதல்ல.

வருமான வரிக் கணக்கின் கீழ் நலன்புரிப் பலன்களை விநியோகிக்கவே 18 வயதிற்கு மேற்பட்ட தனிநபர்களின் பதிவு அவசியம்.

எனவே 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் உள்ளூர் வருமானவரி திணைக்களத்தில் வரிக் கணக்கினை திறப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வரிக் கணக்கின் விவரங்களின் அடிப்படையில் தனிநபர்களுக்கான சலுகைகள் குறித்து அரசாங்கம் தீர்மானங்களை மேற்கொள்ளும் என குறிப்பிட்டுள்ளார். (4)

## ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடியே பொருத்தமான சட்டமூலம் தயாரிக்கப்படும்

### நீதியமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் தயாரிக்கப்பட்டிருக்கும் பிரேரணைகள் தொடர்பாக ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னரே பொருத்தமான சட்டமூலம் தயாரிக்கப்படும். அதற்காக எதிர்வரும் 7 ஆம் திகதி ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,


ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இந்த ஆணைக்குழு நிறுவுவது தொடர்பில் பிரதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது ஊடக அமைச்சினாலாகும்.

அமைச்சரவை உப குழுவினால் பல பிரேரணைகள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தற்போது தயாரிக்கப்பட்டிருப்பது பிரேரணைகள் மாத்திரமாகும். இது தொடர்பாக கலந்துரையாடி பொருத்தமான சட்டமூலம் ஒன்றை தயாரிப்பதற்கு இருக்கிறோம். இந்த பிரேரணைகள் தொடர்பில் ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் தங்களின் யோசனைகள், கருத்துக்களை முன்வைக்க முடியும்.

அதற்காக எதிர்வரும் 7 ஆம் திகதி ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான கலந்துரையாடல் ஒன்று ஊடக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தற்போது தயாரிக்கப்பட்டிருப்பது சட்டமூலம் அல்ல. பிரேரணைகள் மாத்திரமான தொடராகும். இதுதொடர்பாக யோசனைகளை வழங்குவதற்கு ஊடக நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது எனத் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக முதல் ஒருநாள் போட்டியில் ஆப்கானிஸ்தான் வெற்றி




இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.

இந்நிலையில், முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 268 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

அசலங்கா பொறுப்புடன் ஆடி 91 ரன்கள் எடுத்தார். டி சில்வா 51 ரன்னும் எடுத்தார். நிசாங்கா 38 ரன் சேர்த்தார். இதையடுத்து, 269 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் இப்ராகிம் ஜட்ரன் பொறுப்புடன் ஆடி 98 ரனனில் அவுட்டானார். ரஹ்மத் ஷா 55 ரன்னில் ஆட்டமிழந்தார். ஹஸ்மத்துல்லா ஷாகிடி 38 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 46.5 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 269 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி இதே மைதானத்தில் வரும் 4 ஆம்திகதிநடைபெறஉள்ளது.(4)

# உதைபந்தாட்ட போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்த லீக் சுற்று கிண்ண போட்டியில் நாளை திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆனை. யூனியன் விளையாட்டு கழகமும் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோத வுள்ளன.

தொடர்ந்து 5.30 மணிக்கு சரஸ்வதி விளையாட்டு கழகமும் யாழ். பாரதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

அரியாலையில் உள்ள யாழ். உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் குறித்த போட்டிகள் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)



யூனிவேர்சல் சோட்டோகான் கராத்தே யூனியனின் ஏற்பாட்டில் சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டி 28.05.2023 இல் தாய்லாந்து நாட்டில் ( Bangkok) கராத்தே உள்ளக அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் இலங்கை சார்பாக சென்சே Z.A றவுவ் தலைமையில் 6 வீரர்கள் பங்கு கொண்டு வெற்றியீட்டியுள்ளார்கள்.

# டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா வெற்றி பெறவே அதிக வாய்ப்பு






டெஸ்ட் கிரிக்கெட்டின் 2 ஆவது சம்பியனை தீர்மானிக்கும் 2023 ஐ.சி.சி டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டி லண்டனில் இருக்கும் ஓவல் மைதானத்தில் நடைபெறுகிறது. அதில் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற வாய்ப்பு குறைவாகவே இருப்பதாக முன்னாள் வீரர் மேத்யூ ஹைடன் கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது ஓவல் மைதானம் எப்போதுமே ஒரு குறிப்பிட்ட அணிக்கு சாதகமாக இருக்காது.

அது இங்கிலாந்தில் இருக்கும் வழக்கமான பவுன்ஸ் மைதானங்களை விட சற்று அதிக சவாலாகவே இருக்கும். அது சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் சாதகமாக இருக்காது. வேகப்பந்து வீச்சாளர்களுக்கும் அதிகமாக கை கொடுக்காது. எனவே பொதுவான அந்த மைதானத்தில் அவுஸ்திரேலியா எப்படி விளையாடப் போகிறது என்பதை பார்க்க காத்திருக்கிறேன்.

ஒருவேளை இந்த போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் நடந்திருந்தால் கூட அது அவுஸ்திரேலியாவுக்கு மிகப்பெரிய சாதகமாக இருந்திருக்கும். மேலும் 2013 இற்குப்பின் ஐ.சி.சி கோப்பைக்கான போட்டிகளில் வெற்றி பெறவில்லை என்பதை மறந்து விட்டு இந்தியா செயற்பட்டால் வெற்றி காணலாம்.

அது திறமையைப் பற்றிய கேள்வி கிடையாது. மாறாக எந்த மனதுடன் அவர்கள் விளையாடுகிறார்கள் என்பதை பொறுத்தது. இப்போட்டியின் முடிவை பற்றி கவலைப்படாமல் செயலில் சிறப்பாக செயற்படுங்கள் என்பதே இந்திய அணிக்கு. என்னுடைய ஆலோசனையாகும். இவ்வாறு அவர் கூறினார். (4)

# சச்சினின் சாதனையை முறியடித்த ஜோ ரூட்






இங்கிலாந்து- அயர்லாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி அண்மையில் தொடங்கியது. இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

அதை தொடர்ந்து களமிறங்கிய அயர்லாந்து முதல் இன்னிங்ஸில் வெறும் 172 ரன்களுக்கு சுருண்டது. அதை தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 524 ரன்கள் குவித்து டிக்ளர் செய்தது.

ஜேக் கிராவ்லி 56 ரன்களும் பென் டன்கட் சதமடித்து 24 பவுண்டரி 1 சிக்சருடன் 182 ரன்களை விளாசினார். ஒலி போப் இரட்டை சதமடித்து 22 பவுண்டரி 3 சிக்ஸருடன் 205 ரன்கள் விளாசினார்.

ஜோ ரூட் 4 பவுண்டரி 1 சிக்ஸருடன் 56 ரன்கள் அதைத் தொடர்ந்து 352 ரன்கள் பின் தங்கிய நிலமையில் களமிறங்கிய அயர்லாந்து 2 ஆவது நாள் ஆட்டநேரம் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 97 எடுத்திருந்தது.

இப்போட்டியில் 56 ரன்கள் எடுத்த ஜோ ரூட் டெஸ்ட் கிரிக்கெட்டில் 11,000 ரன்களை கடந்த 2 ஆவது இங்கிலாந்து வீரராக சாதனை படைத்தார். அதை விட டெஸ்ட் கிரிக்கெட்டில் 11,000 ரன்களை மிகவும் இளம் வயதில் எடுத்த 2 ஆவது வீரர் என்ற இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் சாதனையும் முறியடித்து அவர் புதிய சாதனை படைத்துள்ளார். (4)

# இந்திய கிரிக்கெட் அணிக்கான புதிய ஜெர்சிக்கள் வெளியீடு

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னதாக இந்திய கிரிக்கெட் அணிக்கான புதிய ஜெர்சிக்கள் வெளியிடப்பட்டன. இந்திய கிரிக்கெட் அணிக்கான புதிய ஜெர்சியை புதிய கிட் ஸ்பான்சர்களான அடிடாஸ் வடிவமைத்துள்ளது.

இந்திய அணியின் புதிய பிரம்மாண்ட ஜெர்சிகள் மும்பை வான்கடே மைதானத்தில் தொங்க விடப்பட்டுள்ளன. (4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3316 மாணவ தாதியர்களை சேவைக்கு உள்ளீர்க்க தீர்மானம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தாதியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் 3316 மாணவர் தாதியர்களை தாதியர் சேவைக்கு உள்வாங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

2018-2019 கல்வியாண்டுகள் தொடர்பாக கல்விப் பொதுச் சான்றிதழ் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் இந்த மாணவர்கள் மற்றும் தாதியர் குழு நாடு முழுவதையும் உள்ளடக்கியதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர் தாதியர்களுக்கு இலங்கையில் உள்ள 16 தாதியர் கல்லூரிகளில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (4)

# பௌத்தத்தை பாதுகாக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

பௌத்தம் மற்றும் செழுமையான பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொசன் தினத்தை முன்னிட்டு அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், "இலங்கை வரலாற்றில் மஹிந்த தேரரின் வருகை, சமய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மைல் கல் என்பது மறுக்க முடியாதது.

இந்த பொசன் பௌர்ணமி தினத்தில், நாட்டில் ஏற்பட்ட, தற்போது படிப்படியாக தீர்க்கப்பட்டு வரும் அரசியல், சமூக, பொருளாதார குழப்பங்கள் தீர்ந்து இலங்கையை உலகின் மீண்டும் முன்னேற்றம் அடைந்த நாடாக உயர்த்துவதற்கு இந்த பௌர்ணமி தினத்தில் நாம் அனைவரும் உறுதிபூணுவோம்.

இந்த பொசன் பௌர்ணமி தினத்தில், மஹிந்த தேரரின் வருகையால் கிடைத்த தூய பௌத்தம் மற்றும் செழுமையான பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாக்க தங்களை அர்ப்பணிக்குமாறு அனைத்து பௌத்த மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். (4)

## வாக்காளர் பட்டியல் திருத்தம்

# கணக்கெடுப்பு பணிக்காக வீடுகளுக்கு வரவில்லை என்றால் அறிவியுங்கள்

(கொழும்பு)

இவ்வருடத்திற்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான சனத்தொகை கணக்கெடுப்பு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள இதுவரை வீடுகளுக்கு வரவில்லையென்றால், அதுபற்றி தெரிவிக்குமாறு இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் முடிவடைய உள்ளது.

எவ்வாறாயினும் கிராம உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக வாக்காளர் பட்டியல் திருத்தத்தை அன்றைய தினம் முடிக்க முடியாது என அதன் தலைவர் கமல் கித்சிறி தெரிவித்துள்ளார். (4)

## 70 கோடி பெறுமதியான தங்கத்துடன்

# இலங்கையர்கள் ஐவர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட 70 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்கத்துடன் 5 பேரை இந்திய பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர்.

இந்திய கடலோரப் பாதுகாப்பு படை வருவாய் புலனாய்வு கண்காணிப்புப் பிரிவு மற்றும் சுங்கத் திணைக்களம் இணைந்து நடத்திய விசேட சோதனை நடவடிக்கையில் இரண்டு படகுகளில் கொண்டு செல்லப்பட்ட 32 கிலோ கிராம் தங்கத்தை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சட்டவிரோத பொருட்கள் கடத்தல் தொடர்பாக இந்திய புலனாய்வு அமைப்புகள் நடத்திய விசேட நடவடிக்கையின் பிரகாரம் கடத்தல் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (4)

# வடக்கு-கிழக்கில் பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியா உதவாது-மனோ



(கொழும்பு)

தமிழர்கள் அதிகளவில் வாழும் வடக்கு-கிழக்கில் பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியாவின் உதவியை கோருவதால் எவ்வித பயனும் இல்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமது நாட்டில் தோன்றிய பௌத்தத்தை மற்ற இடங்களிலும் வளர வேண்டும் என்றே இந்தியா விரும்பும் என்பதனால் இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்தியாவின் ஆதரவு கிடைக்கும் என்பதில் சந்தேகமே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியாவின் உதவியை கோருவதற்கு பதிலாக, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உள்ளூர் நடவடிக்கைகளை எடுக்க தமிழ் அரசியல் வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (4)

# இராசிபலன்

04.06.2023
வைகாசி 21, ஞாயிற்றுக்கிழமை
பூரணை முற்பகல் 9.32 மணிவரை
கேட்டை பின்னிரவு 4.38 மணிவரை

சுபநேரம்-8.52-10.22 மணிவரை
இராகுகாலம்-4.22-5.52 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்-கார்த்திகை

வளவன்



**மேஷம்**

வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலைகள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.



**கடகம்**

மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.



**துலாம்**

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகப்படுவீர்கள், வெளி மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேவைகள் பூர்தியாகும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



**மகரம்**

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பலரது அன்பிற்குப் பாத்திரமாவீர்கள்.



**ரிஷபம்**

நம்பி வந்தவர்களுக்கு உதவ முற்படுவீர்கள், கடன் தொல்லைகள் குறையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.



**சிம்மம்**

வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.



**விருச்சிகம்**

விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர் பகை அகலும், கற்பனை மிகுதியான நாள்.



**கும்பம்**

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருப்பர், அன்றாட பணிகள் நன்றாக நடைபெறுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மிதுனம்**

செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



**கன்னி**

உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



**தனுசு**

இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் காட்டும், சயன சுகக் குறைவான நாள்.



**மீனம்**

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகளின் எல்லை விரிவாகும் போதெல்லாம் அமைதியின்மை என்ற தொல்லை பெருகவே செய்யும்.

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரம் நடுகையும் சிரமதானமும்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற "சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான முதற்படிகள்" என்ற செயற்றிட்டத்தின் கீழ் பயனுள்ள மரநடுகை, கடற்கரை, கிராம சுற்றாடல் சுத்தப்படுத்தல் போன்ற சிரமதான நிகழ்வை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் நாளை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையிலும் காலை 10.30 மணிக்கு பலாலி அன்ரனிபுரத்திலும் வறுத்தலைவிளானிலும் மேற்படி நிகழ்வுகள் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)

# கணபதி ஹோமம் சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான கணபதி ஹோமம் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30ற்கு நடைபெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (4)



நவாலி சென்.பீற்றர்ஸ் றோ. க.த.க பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியரால் வலி.தென்மேற்கு பிரதேச முன்னாள் உறுப்பினருமான திருமதி. செந்தினி தருமசீலன் அகில இலங்கை சமாதான நீதிவானாக கடந்த மே 4 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி. இ. கண்ணன் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

# திடீர் சுற்றிவளைப்பில் சிக்கிய பெருந்தொகை மதுபான போத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் நேற்றுக் காலை பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய புண்ணச்சோலை, குமாரபுரம் ஆகிய பகுதிகளில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோத முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் மதுபானப் போத்தல்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# துவிச்சக்கரவண்டி திருட்டு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவான் ஈவினை பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீடு புகுந்து துவிச்சக்கரவண்டி ஒன்று திருடப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

வீட்டு வளவில் பெறுமதி மிக்க வேறு பொருட்கள் இருந்த போதிலும் துவிச்சக்கர வண்டி மாத்திரம் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (4)



யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 100 ஆவது சிறைச்சாலை பாதுகாவலர் அணியின் 8 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குருதிக்கொடையில் ஈடுபட்டனர். அதன்பின்னர் இந்த நிகழ்வின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டுடன். மரக்கன்றுகள் நாட்டியும் வைக்கப்பட்டன.

(படம்-கஜிந்தன்)

# கொடிகாமம் பகுதியில் இளைஞன் மீது கத்திக்குத்து

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புகையிரத நிலைய வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இளைஞன் ஒருவர் கத்திக் குத்திற்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கத்திக் குத்திற்கு இலக்கான இளைஞனை அயலவர்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில் -பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த 32வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு கத்திக் குத்திற்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இருப்பினும் மேற்படி சம்பவம் தொடர்பாக வெள்ளிக்கிழமை பிற்பகல் வரை முறைப்பாடுகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-30)



கொக்குவில் முதலியார் விளையாட்டுக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச புகைத்தல் மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு " புகைத்தலிலிருந்து மீண்ட ஒரு கிராமம் மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம் "எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வானது கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை கொக்குவில் சுப்பிரமணியம் மாலதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

# அச்சுவேலியில் வர்த்தகநிலையம் விசமிகளால் தீக்கிரை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் நேற்று வர்த்தக நிலையமொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்கு விக்னேஸ்வரா பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றே இவ்வாறு சேதமடைந்தது.

யாழ் மாநகர சபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதும் தீப்பரவலால் வர்த்தக நிலையம் பெருமளவில் சேதமடைந்துள்ளது.

வர்த்தக நிலையத்துக்கு விஷமிகள் தீ வைத்திருக்கலாமென வர்த்தக நிலைய உரிமையாளர் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் அச்சுவேலி பொலிஸ்நிலையத்திலும்முறைப்பாட்டைப் பதிவு செய் துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு உள்ளதுடன் தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-33)

# தென்மராட்சியில் அதிகரிக்கும் நூதன திருட்டுச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் கடந்த சில தினங்களாக நூதன திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ம.நடனதேவன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்

தம்மை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என அறிமுகப்படுத்திய நபர்களே இவ்வாறான நூதன திருட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நுணாவில் பத்தியில் உள்ள சமுர்த்தி பயனாளியின் வீட்டிற்கு சென்ற ஒருவர் தன்னை சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர் என அறிமுகப்படுத்தி உங்களுக்கு சமுர்த்தி ஊடாக ஒரு இலட்சம் ரூபாய் பணம் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும்-அதனை பெற நீங்கள் இருபதாயிரம் ரூபாவை முற்பணமாக செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவரின் பேச்சை நம்பி வீட்டில் இருந்த மூதாட்டி வீட்டிற்குள் சென்ற நிலையில் மேற்படி சந்தேகநபர் வீட்டின் வெளி அறைக்குள் இருந்த தொலைபேசி மற்றும் 15,000ரூபாய் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துக் கொண்டு தப்பித்துள்ளார்.

அதே சமயம் சாவகச்சேரி-மடத்தடி பகுதியில் மலசலகூட தேவைப்பாடு உடைய வீடு ஒன்றிற்கு சென்ற நபர் ஒருவர் வீட்டு தலைவரின் அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை சரியாக கூறி உங்களுக்கு மலசலகூடம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்த நீங்கள் இருபதாயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் எனக் கூறி பணத்தை நூதனமாக பெற்றுச் சென்றுள்ளார்.

இவ்வாறான ஏமாற்று வேலைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக முதியவர்கள் தனித்திருக்கும் வீடுகள் இலக்கு வைக்கப்படுகின்றன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆராய்ந்து இவ்வாறான ஏமாற்று வேலைகளை மற்றும் வறிய மக்கள் வயிற்றுப் பசிக்காக வைத்திருக்கும் பணத்தை அபகரிக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (4-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 400

Viber 076 636 3378



# மீண்டும் தொடங்கும் அச்சுறுத்தல்கள்



“ பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல், அரசுக்கு எதிராகவோ பௌத்தத்திற்கு எதிராகவோ எவரும் வீதியில் இறங்கக் கூடாது என்பதற்கான அச்சுறுத்தலாய் கூட இருக்கலாம். ”

ஆயுதப் போரினால் ஒரு நாளும் தீர்வைத் தந்துவிட முடியாது என்பதே உலக வரலாறு.

அறவழிப் போர் எல்லையில்லாத சுதந்திரத்தைப் பெற்றுத் தரவல்லது என்பதற்கு மகாத்மா காந்தியின் சுதந்திரப் போராட்டம் நல்லதொரு உதாரணமாகிறது.

ஆயினும் இலங்கை. வரலாற்றில் ஆயுதப் போராட்டமோ அறவழிப் போராட்டமோ வெற்றி பெறவில்லை என்பது தான் உண்மையானது.

ஏனெனில் அந்தளவிற்கு இலங்கையை ஒரு சாராருக்கு சொந்தமான நாடாக மாற்றி வைத்திருக்கின்றனர் காலம் காலமாக வந்த ஆட்சியாளர்கள்.

ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் ஆயுதப் போராட்டம் 2009 உடன் மௌனித்துப் போக அவர்களின் அறவழிப் போராட்டங்கள் எவரிடமும் எடுபடாமல் போனது வேதனைக்குரியது.

மொழி ரீதியாகவும் பண்பாடு கலாசார ரீதியாகவும் பலம் பொருந்திய தமிழினம் எங்கு தவறிழைத்தது என்பதை அந்த இனம் இன்னும் கண்டு கொள்ளாமல் இருப்பது அவ்வளவு நல்லதல்ல.

அந்தளவிற்கு அவ் இனத்தின் பண்பாடு கலாசாரம் திட்டமிட்டு சிதைக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அதற்கு எதிராக குரல் கொடுப்பவர்களும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

தமிழினம் என்றால் பயங்கரவாதிகள் எனும் தோரணையில் செயற்படுவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

பெரும்பான்மை ஆட்சியாளர்களின் செயற்றிட்டங்கள் மீது ஏன் எதிர்ப்புகள் எழுகின்றன என்பதை கண்டுகொள்ளாமல் எதிர்ப்பவர்களை அச்சுறுத்துவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த நாடு பௌத்த நாடு என்றும் இங்கு பௌத்தத்திற்கே முன்னுரிமை என்றும் கூறிக் கொள்ளும் ஆட்சியாளர்கள் மற்ற மதங்களை நிந்திப்பதற்குள் இருக்கும் பொருள் என்ன என்பதை உணர்ந்த எவரும் எதிர்ப்பை வெளியிடாமல் இருந்து விட முடியாது.

பெரும்பான்மை ஆட்சி அதிகாரங்களைக் கொண்டிருப்பதாலும் அவர்களின் மதம் பௌத்தம் என்பதாலும் சட்ட விரோத செயற்பாடுகளிற்கு கூட நியாயத்தை சீர்தூக்கி பராத பாதுகாப்பு தரப்பு பௌத்தத்தின் பக்கம் சாய்ந்திருப்பது ஒரு நாளும் அறம் அன்று.

அண்மையில் தையிட்டி பௌத்த விகாரை விவகாரத்தில் பாதுகாப்பு தரப்பினரின் செயற்பாடாயினும் சரி வெடுக்கு நாறி ஆதிசிவன் ஆலய விவகாரமாயினும் சரி முல்லைத்தீவு குருந்தூர் மலையில் பௌத்த சின்னம் இருப்பதாய் காட்டிக் கொள்வதிலும் சரி நியாயத்தின் பக்கம் நிற்காது தமது மதத்தின் பக்கம் நிற்பது ஒரு நாளும் உண்மையை வெளிக் கொணராது.

இது விடயமாக நயினாதீவு நாக விகாராதிபதி கருத்துத் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கில் பௌத்த விகாரை அமைப்பதன் தேவை என்ன எனவும். பௌத்தர்கள் வாழாத வட கிழக்கில் யாருக்கு விகாரைகள் அமைக்கப்படுகின்றன என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். பௌத்தத்தைத் திணிக்கும் துறவிகளும் அரசியல் வாதிகளும் இருக்கும் நிலையில் இவ்வாறான துறவிகளும் இருக்கின்றார்கள் என்பது மனநிம்மதியைத் தருகின்றது.

தவிர தமிழர் பிரதேசங்களில் பொது நிகழ்வுகள் எது நடந்தாலும் அங்கு புலனாய்வாளர்களின் பிரசன்னம் அதிகரித்து காணப்படத் தொடங்கிவிட்டது.

நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்ட நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரச புலனாய்வாளரால் தாக்குதலுக்குட்பட்டிருந்தார்.

புலனாய்வாளர்கள் குறித்த நிகழ்வை காணொளி எடுக்க, நீங்கள் யார் எனக் கேட்டதில் எழுந்த வாக்குவாதம் பாராளுமன்ற உறுப்பினரைத் தாக்கும் அளவில் முடிந்திருக்கிறது.

கஜேந்திரகுமாரைத் தாக்கிய அரச புலனாய்வாளர் தப்பியோடிவிட, கூட வந்தவரை பொது மக்கள் தடுத்து வைத்து போராட்டம் நடத்தினர்.

குறித்த இடத்திற்கு வந்திருந்த பொலிஸ் அதிகாரி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தனது கைத்துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியிருக்கிறார்.

இங்கு நாம் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும்.அதாவது தையிட்டி பகுதியில் அமைந்திருக்கும் பௌத்த விகாரையை அகற்றக்கோரி போராட்டத்தை முன்னெடுத்ததில் தீவிரமாக செயற்பட்டவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அரச புலனாய்வாளர்களின் தாக்குதல் மற்றும் பொலிஸ் அதிகாரி துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திய செயற்பாடு என்பன; பௌத்தத்திற்கு எதிராக கஜேந்திரகுமார் செயற்படுகிறார் என்ற காழ்ப்புணர்ச்சியாய்க்கூட இருக்கலாம்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இவ்வாறான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனின் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தும் சாதாரண பொது மக்களின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இது விடயத்தில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் இது.


கஜேந்திரகுமாருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை சர்வ சாதாரணமாக எடுத்து விட முடியாது.இதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை எனின் நிலை இன்னும் மோசமாகும்.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் தமிழ் மக்களை பௌத்தத்திற்கோ அரசுக்கோ எதிராக வீதியில் இறங்காமல் செய்யும் அச்சுறுத்தலாய்க் கூட இருக்கலாம். ஆதலால் நாம் மிக நுட்பமாக இவ் விட யத்தைக் கையாளவேண்டும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## பிராமணப் பெண் பிள்ளைகளின் மூக்குத்திகளை அகற்றுவது முறையோ?

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரமடைகின்றோம்.

ஆற்றல் மிகு எழுத்தாளரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

அந்நேரம் சாத்திரியார் சதாசிவம் தனது கையில் வைத்திருந்த சில துண்டுப் பிரசுரங்களை வாசித்த படி இருந்தார்.

இதனை அவதானித்த மூப்பர்; என்ன சாத்திரியார் ஏதும் குறிப்புப் பாக்கிறியளோ என வினவினார்.

**சாத்திரியார்:-** நான் ஒண்டும் குறிப்பு பாக்கல்ல. என்ர பேரன் ஓ.எல் சோதினை எடுக்கிறானல்லோ. ஒவ்வொரு நாளும் சோதினை முடிய, பாடசாலைக்கு வெளியால நிண்டு சில ஆட்கள் துண்டுப் பிரசுரம் கொடுப்பினமாம்.

**கங்காணி:-** சாத்திரியார் அதென்ன துண்டுப் பிரசுரம்.

**சாத்திரியார்:-** ஏ.எல் படிக்க வாங்க, ஆங்கிலம் பேசலாம் வாங்க, ஐசிரி படிக்கலாம் வாங்க எண்ட துண்டுப்பிரசுரங்கள் தான் அவை.

**கங்காணி:-** அப்படித் துண்டுப் பிரசுரம் கொடுக்கிறது நல்லது தானே!

**சாத்திரியார்:-** துண்டுப் பிரசுரம் கொடுக்கிறதை நான் குறை சொல்லவரல்ல. ஆனால் ஓ.எல் சோதனை ஜூன் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை முடியுது.

ஆனால் 2025 ஆம் ஆண்டிற்கான ஏ.எல் வகுப்புகள் ஜூன் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகுது.

ஆக, வெள்ளிக்கிழமை ஒரு நாள் மட்டும் தான் அந்த மாணவர்களுக்கு ஓய்வு.

**வாத்தியார்:-** இதென்ன நாசமறுப்பு. 17 மாதமாக ஓ.எல் படிச்சு சோதனை எழுதிய அந்த மாணவர்கள் ஒரு கிழமையாவது றிலாக்ஸாக இருக்க வேண்டாமோ.

ஒரு நாள் மட்டும் லீவு விட்டு மறுநாள் புதிய ஏ.எல் வகுப்புக்களை தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கிறதென்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

2022 டிசெம்பர் மாதம் ஓ.எல் பரீட்சை எழுத வேண்டிய மாணவர்கள் 2023 ஆண்டு ஜூன் மாதம் தான் பரீட்சை எழுத முடிந்தது.

இந்த 17 மாதமாக தனியார் கல்வி நிறுவனங்களில சாதாரண தரப் பாடத்திட்டம் நடந்து கொண்டே இருந்தது.

நிலைமை இப்படியாக இருக்கும் போது, அந்த மாணவர்கள் ஆற அமர இருந்து உறவுகளின்ர வீடுகளுக்குப்போய் வந்து கொஞ்சம் சந்தோசமாக இருந்தால் தானே அதுகளின்ர மனமும் ஆறுதல் அடையும்.

**பண்டிதர்:-** முந்தியெல்லாம் ஓ.எல் றிசல்ட் வந்த பிறகுதான் ஏ.எல் வகுப்புகள் ஆரம்பமாகும்.

ஆனால் இப்ப ஓ.எல் சோதினை முடிந்த அடுத்த நாளே ஏ.எல் வகுப்புகளைத் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பித்து விடுகினம். ஆனால் இது அவ்வளவு ஆரோக்கியமான செயல் அல்ல.

**விதானையார்:-** இன்றைய இளம் சமூகம் தங்கட பொறுப்புகளை உணர்ந்து கொள்ளாமல் இருப்பதற்கும் சமூகத்தோட இணைந்து போகாமல் தங்கள் பாட்டில நடந்து கொள்வதற்கும் இப்படியான நெருக்கீடுகள் மூல காரணம் என்பதுதான் உண்மை.

முன்பெல்லாம் மாணவப் பருவம் பொற்காலமாக இருந்தது. ஆனால் இன்றைக்கு படி... படி... எண்ட அழுத்தம் மாணவர்களை உள நெருக்கீட்டிற்கு ஆளாக்கிவிட, அந்த இளம் பிஞ்சுகளுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போகுது.

**சிறாப்பர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். பரீட்சை நடந்து கொண்டிருக்கிறபோது, ஏலவே நடந்து முடிந்த பரீட்சைகளின் பகுதி ஒன்றுக்கான விடைகளை சிலர் சமூக வலைத்தளங்களில் பிரசுரித்து மாணவர்களைக் குழப்புகினம். இதை விட்ட அநியாயம் வேற என்ன இருக்குது.

**மூப்பர்:-** அட, இப்படியும் நடக்குதோ. உண்மையில நடந்து முடிந்த பரீட்சைகள் பற்றி மாணவர்கள் சிந்திக்காமல், நடக்கப்போற பரீட்சையில தான் கவனம் செலுத்த வேணும்.

ஆனால் மாணவர்களை குழப்புகிற மாதிரி விடைகளைப் போட்டு அநியாயம் நடக்குது.

**பண்டிதர்:-** அது சரி இப்படியான செயல்கள் நடப்பதை எங்கட கல்வியாளர்கள் தடுத்து நிறுத்த மாட்டினமோ?

**விதானையார்:-** எங்க? தடுத்து நிறுத்திறது. எல்லாரிட்டயும் பணம் உழைக்கிற மனநிலையைத் தவிர சமூகக் கருசணை எவரிட்டயும் இல்லை. இப்படி இருக்கும் போது, எந்த அநியாயம் நடந்தாலும் அதைக் கேட்பதற்கு எவரும் இருக்காயினம்.

**வாத்தியார்:-** உண்மை தான். சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் தொலைபேசியில தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில உள்ள ஓர் இந்துப் பாடசாலையில பிராமணப் பிள்ளைகள் அணிந்திருந்த மூக்குத்திகளை அகற்றியிருக்கினமாம்.

பிராமண சமூகத்தில பெண் பிள்ளைகள் மூக்குத்தி அணிவது ஒரு கட்டாயமான மரபு. அதிலும் மூக்குத்தி அணிவது ஒரு சடங்காக-மங்களகரமான நிகழ்வாக நடக்கிறது. ஆனால், இந்துப் பாடசாலைகளில மூக்குத்தியை அகற்றுவது பிராமண சமூகத்தை பாதிக்கச் செய்கிறது எனக் கவலைப்பட்டார்.

அதோட தென்மராட்சியில் உள்ள ஓர் இந்துக் கல்லூரியில மாணவர்கள் கையில கட்டியிருக்கிற கோயில் நூல்களை அறுத் தெறிவதாகவும் இது இறை நம்பிக்கையை மாணவர்களிட்ட இருந்து பறிக்கும் செயல் எண்டும் சர்வதேச இந்துக் குரு பீடத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான காரியங்களை இந்து சமயம் தவிர்ந்த வேறு எந்தச் சமயத்திலும் செய்ய முடியுமோ எண்டும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

**விதானையார்:-** இந்து சமயத்தவர்கள் தான் இந்து சமயத்துக்கு எதிரிகள்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஏற்றுக் கொள்ளுவது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லறையின் மீது ஏறி இருந்து ஆட்சி செய்தால் நாடு முன்னேறுமா வியாசரே?

**சாது — தொண்டைமானாறு**

**கணவனுக்கு துரோகம் செய்யும் பெண்கள் பற்றி?**

கணவனுக்குத் துரோகம் செய்யும் பெண்கள் என்பதற்குப் பதில் மனைவிக்குத் துரோகம் செய்யும் ஆண்கள் என்று வைத்துக் கொள்வோமே.

கற்பு நிலை என்பதை பெண்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தியது ஆண் வர்க்கமே.

ஏன் அதை ஆண்களுக்கு நிலைப்படுத்தாமல் விட்டுவிட்டனர்.

இதே ஆண் ஆதிக்கத்தின் பெரும் சுய நலம்.தாம் தப்பித்துக் கொள்வதற்கான கருவி.அவ்வளவு தான்.

**தி.க.சபா — வதிரி**

**அனைத்து இனங்களுக்கும் சொந்தமானதுதானே இந்த நாடு?**

இது தான் உண்மை. ஆனால் இங்கு நடப்பதோ வேறுமாதிரியல்லவா இருக்கிறது. இந்த நாடு பெரும்பான்மையினருக்கு மாத்திரமே சொந்தம் என்றும் ஏனையோர் இங்கு வாழ்வதற்கு தகுதியற்றவர்கள் என்றும் சிந்திப்பவர்கள் தானே எம்மை ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இக் கொடுமைகள் அனைத்துக்கும் ஒரு முடிவு வேண்டும்.

அந்த முடிவு இலங்கையில் அனைவரும் சமம் என்றான முடிவாகவே இருக்க வேண்டும்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**பௌத்தத்தை எதிர்ப்பவர்கள் இந்த நாட்டில் இருக்கக் கூடாதாமே?**

இந்த மன நிலை தான் நாட்டின் இப்போதைய நிலைக்குக் காரணம்.

இவ்வளவு பட்டபின்னரும் இதை பெரும்பான்மை அரசின் தலைவர்கள் எவரும் உணருகின்றார்கள் இல்லையே.

எரியும் நெருப்பில் எண்ணெய் விடுவது போல் வன்மத்தை விதைத்துக் கொண்டிருக்கிறார்களே.

இச் செயல் இந்த நாட்டை இன்னும் இன்னும் இக்கட்டில் மாட்டுமே தவிர ஒரு நாளும் முன்னேற்றத்தைத் தராது.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் — குப்பிளான்**

**கல்லறையின் மீது ஏறி இருந்து ஆட்சி செய்தால் நாடு முன்னேறுமா வியாசரே?**

பாதிக்கப்பட்டவர்கள் மனதால் உருகி திட்டினால் அது நிச்சயம் பலிக்கும்.

பாதிக்கப்பட்ட தமிழினத்தின் மன வேதனையின் வெளிப்பாடுதான் இன்றைய இலங் கைத் திருநாட்டின் நிலைக்குக் காரணம்.

இதைப்புரிய வேண்டிய அரசியல் வாதிகள் புரியவில்லை.

மாறாக மேலும் மேலும் தமிழினத்தை பயங்கரவாதிகள் எனக் கூறி காயப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

இப்படியே போவது அவ்வளவுக்கு நல்ல தல்ல என்பது தான் உண்மையானது.


**ஜெகமோகன் — கொக்குவில்**

**அன்பின் வியாசரே ஈழத் தமிழரின் புலம் பெயர் பரம்பல் பற்றிக் கூறுங்கள்?**

ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்திருக்கா விட்டால் ஈழத்தமிழர்கள் இறந்து புதைத்த இடங்களில் இன்று பாரிய மரங்களே முளைத்திருக்கும்.

ஈழத்தையும் ஈழத்தமிழரையும் அவர்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் செய்யும் அக்கிரமங்களையும் புலம் பெயர் தமிழர்களே சர்வதேசம் வரை உரக்கக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

புலம் பெயர் தமிழர்கள் இல்லாதிருந்தால் ஈழத் தமிழினம் முற்றாகவே அழிந்திருக்கும்.



டெங்கு நுளம்பை ஒழிப்பது எவ்வாறு என்று கூற முடியுமா வியாசரே?

**மது — யாழ்ப்பாணம்**

**அண்ணன்- தங்கை உறவு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

அண்ணன் தங்கை உறவில் அண்ணன் என்பவன் அண்ணனல்ல தந்தையே.

தன் தங்கைக்கு அமையப் போகும் எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் மிகக் கவனமாக முடிவுகளை எடுக்க தலைப்படுகிறான்.

ஆனாலும் சில நேரங்களில் தங்கைகள் தாம் எடுக்கும் முடிவில் விடாப்பிடியாய் நிற்க அண்ணன்கள் அதில் உடைந்து போய் விடுவார்கள்.

ஆனாலும் தன் தங்கை கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வீழ்ந்தால் கூட அவன் உடைந்து போய் விடுவான்.

**யாதுஷன் — இளவாலை**

**தலைவர் பிரபாகரன் இறந்து விட்டாரா வியாசரே?**

உங்கள் கேள்விக்கு நான் பதில் எழுத அதைப் புலனாய்வாளர்கள் பார்க்க, 4 ஆம் மாடிக்கு விசாரணைக்கு வரச்சொல்லி எனக்கு அழைப்பு வர, நான் மனைவி பிள்ளைகள் சகிதம் கொழும்பு போய் இராம கிருஷ்ண மிஷனில நிண்டு 4 ஆம் மாடிக்கு விசாரணைக்குப் போக,

பிள்ளையைக் கொண்டு உள்ள போகேலாது எண்டு அவர்கள் கூற தனிய உள்ள போய் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் முழிக்க. தேவையா இதெல்லாம்?

**திகான் — வடமராட்சி**

**டெங்கு நுளம்பை ஒழிப்பது எவ்வாறு என்று கூற முடியுமா வியாசரே?**

பொறுப்பின்றிய பின்தங்கிய இனமாக நாம் மாறிவிட்டோம் என்பது தான் வேதனை.

எம்மை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் எனின் எம் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஆனால் நாம் அவ்வாறு பொறுப்பாக நடக்கிறோமா? இல்லையே.


செய்யும் செயல் அனைத்தும் அநியாயம். பிறகு எப்படி நோய் நொடி அண்டாமல் இருந்துவிட முடியும்.

திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நீதிக்கு தலை வணங்கு
இயற்றியவர்: நா.காமராசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ஜெயச்சந்திரன்



எத்தனை மனிதர்கள் உலகத்திலே அம்மா
எத்தனை உலகங்கள் இதயத்திலே
எத்தனை மனிதர்கள் உலகத்திலே அம்மா
எத்தனை உலகங்கள் இதயத்திலே
ஏழையின் உறக்கங்கள் பாதையிலே அந்த
மாளிகை மயக்கங்கள் போதையிலே
எத்தனை மனிதர்கள் உலகத்திலே அம்மா
எத்தனை உலகங்கள் இதயத்திலே

எட்டடி மண்ணுக்குப் போகும்வரை இந்தக்
கற்பனை ஊர்வல வாழ்க்கையிலே
யாரோ ஒருவன் தோட்டமிட்டான் அதில்
யாரோ பலனை அனுபவித்தார் அதில்
யாரோ பலனை அனுபவித்தார்

எத்தனை மனிதர்கள் உலகத்திலே
எத்தனை உலகங்கள் இதயத்திலே

தாயினைக் கடவுள் என நினைத்தான் இவன்
தாய் மடி கோவில் என வளர்ந்தான்
கோவிலைப் பிரிந்தே வரும்போதும் மனக்
கோவிலில் தாய் தான் வாழுகின்றாள் மனக்
கோவிலில் தாய் தான் வாழுகின்றாள்

எத்தனை மனிதர்கள் உலகத்திலே
எத்தனை உலகங்கள் இதயத்திலே

பக்கத்தில் திருடன் விழித்திருப்பான் நல்ல
கட்டத்தில் அவன் தான் அகப்படுவான் (இசை)
தூக்கமும் துன்பமும் தொடர்வதுண்டு இந்தத்
தொடர்கதை ஒரு நாள் முடிவதுண்டு இந்தத்
தொடர்கதை ஒரு நாள் முடிவதுண்டு

எத்தனை மனிதர்கள் உலகத்திலே அம்மா
எத்தனை உலகங்கள் இதயத்திலே
ஏழையின் உறக்கங்கள் பாதையிலே அந்த
மாளிகை மயக்கங்கள் போதையிலே
எத்தனை மனிதர்கள் உலகத்திலே அம்மா

# 'தோற்றுப் போகலாம் கவலையே இல்லை'

**'வெளிச்சத்தில் தேடுகிறேன்' என்று வீட்டில் தொலைத்த ஊசியை வீதியில் தேடினால் எப்படி? தோல்விக்கான காரணத்தை சறுக்கலுக்கான பிரச்சினைகளை நமக்குள் தேடினால்தான் உண்மை புலப்படும்.**

இருபதோ, அறுபதோ... எந்த வயதினராக இருந்தாலும் சரி... தற்காலத்தில் பலரும் திட்டமிட்ட காரியங்களில் சற்றே சறுக்கிவிட நேர்ந்தால், பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகிவிடுகிறார்கள்.

தோல்வி மனப்பான்மையில் துவண்டு போகிறார்கள். அதனால் எழும் கழிவிரக்கத்தின் விளைவால், பழியை மற்றவர் மீது சுமத்துகிறார்கள்.

சிலர் இருக்கிறார்கள்... கடவுளையும் விதியையும்கூட அவர்கள் விட்டுவைப்பதில்லை! வனவாசத்தில் இருந்த தருமனே... தான் படும் கஷ்டத்துக்கு, இப்படித்தான் விதியின் மீது பழியைப் போட்டான்.

ஆனால், திரௌபதி என்ன சொன்னாள் தெரியுமா? 'எள்ளின் உள்ளே எண்ணெயும், பசுவின் மடியில் பாலும் உண்டு என்று சொல்வதால் என்ன பயன்? செயல்பட்டால்தான் எண்ணெயும் பாலும் வந்து சேரும்.

முயற்சி வெற்றி பெற்றால் புகழ் வருகிறது. தோற்றுப்போனாலும் இகழ்ச்சி என்பது 'இல்லை' என்று தன் கணவனுக்குக் கடமையை உணர்த்தினாள்.

'வெளிச்சத்தில் தேடுகிறேன்' என்று வீட்டில் தொலைத்த ஊசியை வீதியில் தேடினால் எப்படி? தோல்விக்கான காரணத்தை, சறுக்கலுக்கான பிரச்சினைகளை நமக்குள் தேடினால்தான் உண்மை புலப்படும்.

விவசாயி ஒருவர் வெளியூர் சந்தையில் சரக்குகளை விற்றுவிட்டு பணத்துடன் திரும்பிக்கொண்டிருந்தார்.

வழியில் ஒருவன் அவரைப் பின்தொடர்ந்தான். தன்னிடமிருக்கும் பணத்துக்காகவே பின்தொடர்கிறான் என்பதை விவசாயி புரிந்துகொண்டார்.

வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினார் விவசாயி. அவரைப் பின் தொடர்ந்தவனும் அங்கேயே தங்கினான். இரவு வெகு நேரம் கழித்து விவசாயி உறங்கிவிட்டார் என்பதை உறுதி செய்தபிறகு அவருடைய பை, பெட்டி முதலான உடைமைகளில் பணத்தைத் தேடினான். கிடைக்கவில்லை. வெகுநேரம் தேடிப் பார்த்துச் சலிப்படைந்தவன் உறங்கப் போனான்.

விடிந்ததும் பார்த்தால் விவசாயி பணத்தை எண்ணிச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். இந்த ஆசாமி பொறுமை இழந்து கேட்டேவிட்டான்... "இந்தப் பணத்தை எங்கே வைத்திருந்தீர்?"

விவசாயி சிரித்தபடி சொன்னார்.

"நீ தேட முனையாத இடத்தில்தான்!"

"அது எந்த இடம்?"

"உன் தலையணை உறைக்குள்! என்னிடம் தேடாமல் நீ உன்னிடத்தில் தேடியிருந்தால் தேடியது கிடைத்திருக்கும்" என்றார் விவசாயி.

நம்மில் பலரும் இப்படித்தான் காரணங்களை வெளியே தேடிக்கொண்டிருக்கிறோம். நமக்குள் தேடினால் நம் பலவீனங்கள் தெரியவரும். நாமும் உள்ளே தேடுவோம். அவசியம் தவிர்க்க வேண்டிய பலவீனங்களை அறிந்துகொள்வோம்.

மேலை நாட்டு நாடோடிக் கதை ஒன்று உண்டு. காட்டுப் பூனை ஒன்று முயலைத் துரத்தியது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தப்பியோடிய முயல் ஒரு பொந்துக்குள் சென்றுவிட்டது.

காட்டுப் பூனையோ பொந்தின் வாயிலில் அமர்ந்துகொண்டது. வெளியேற வேறு வழி இல்லை. எவ்வளவு நேரம்தான் பொந்துக்குள்ளேயே இருப்பது? எனவே, முயல் ஒரு யோசனை செய்தது.

'ஏ காட்டுப் பூனையே! நான் வெளியே வருகிறேன். உனக்கு உணவாகவும் சம்மதிக்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை! இந்த மரத்துக்கு முன்னால் நெருப்பு மூட்டு. நான் அந்த நெருப்பில் குதித்து வறுபடுகிறேன். அதன்பின் என்னை நீ உணவாகப் புசி! என்னைப் பச்சையாக உண்பதை நான் விரும்பவில்லை' என்றது முயல்.



காட்டுப் பூனையும் சம்மதித்தது. தீ மூட்டியது. நெருப்பு நன்றாகக் கனன்று எரியத் தொடங்கியதும், முயல் திடீரென பொந்திலிருந்து பாய்ந்து, அந்த நெருப்புத் துண்டுகள் காட்டுப் பூனைமீது தெறிக்குமாறு சிதற அடித்துவிட்டு, குதித்துத் தப்பி ஓடிவிட்டது.

சரி, இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடம் என்ன? பலமுள்ளவர்கள் ஜெயிப்பதில் எந்த அதிசயமும் இல்லை. அப்பாவிகள் வெற்றி பெறுவதற்கு புத்திசாலித்தனமும், தந்திரமும் தேவைப்படுகின்றன. சக்தி மட்டும் போதாது சாதுர்யமும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்கு விசிலுபோடு...

ஒரே நாளில் போட்டி முடிவுற்றுக் கோப்பை கிடைத்திருந்தால் கூட சி.எஸ்.கே ரசிகர்களை இது இத்தனை கொண்டாட்ட மனநிலைக்கு எடுத்துச் சென்றிருக்காது. நிகழவே முடியாதென்ற நிலையிலிருந்து நினைத்த பிடித்தமான விஷயம் நிறைவேறுவது எல்லைகளற்ற மகிழ்ச்சியை அளிக்கும். சி.எஸ்.கே வீரர்கள் மற்றும் ரசிகர்களின் தற்போதைய நிலையும் இதுதான்.

"இன்று போய் நாளை வா" என வழியனுப்பிய மழையால் ஐ.பி.எல் வரலாற்றில் முதல்முறையாக ரிசர்வ் நாளுக்கு ரீடேக் வாங்கியது இறுதிப்போட்டி.

கில்லின் விக்கெட்தான் ஐ.பி.எல் கோப்பை ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் குகையைத் திறப்பதற்கான மந்திரம்என்பதுசிஎஸ்.கே அறிந்ததே. ஷார்ட் பவுன்சர் பந்துகளை அநாயசமாக மிட்விக்கெட்டினை நோக்கி புல் செய்து பந்துகளை பவுண்டரிகளாக உருமாற்றுவதிலும், ஃபுல் லென்த்தில் லெக்சைடில் விழும் பந்தில் கிளான்ஸ் ஆடுவதிலும் கில் கில்லாடிதான். எனினும் இத்தொடரில் சமயத்தில் ஷார்ட் பால்களை புல் ஷாட் ஆக்க முற்படுகையில் டைமிங் செய்வதில் தவறிழைத்து விக்கெட்டையும் பறிகொடுத்திருந்தார். அதேபோல் பேக் ஆஃப் லென்த்தில் மிடில் ஸ்டம்பை நோக்கிப்பாயும் பந்துகளும் அவரை சோதித்தன.



இதனை மனதில் வைத்து அதே லைனில் தொடர்ந்து பந்துகளை டோனி வீசவைத்தார். ஒருகட்டத்தில் தீபக் சஹாரினை பேக்வேர்ட் ஸ்கொயரில் நிறுத்தி துஷாரை ஃபுல்லர் லெந்தில் டோனி வீசவைக்க நினைத்ததைப்போல் அப்பந்தை சஹாரினை நோக்கி கில் அனுப்ப, விடவே வாய்ப்பில்லாத கேட்ச்சை சஹார் கைவிட்டு பெரும் அதிர்ச்சியளித்தார்.

அதிவேகத்துக்கும் சுழலுக்கும் சற்றே மடங்குவாரென்றாலும் மீடியம் பேஸ் சாஹாவுக்குச் சாதகமான ஒன்று. ஃபார்மில் உள்ள கில்லினைப் பற்றியோ சொல்ல வேண்டாம். ஆளுக்கு ஒருவராகப் புதுப்பந்து பௌலர்களை அவர்கள் தாக்கி ஆட பவர்பிளே முடிவிலேயே 62 ரன்களை குஜராத் எட்டிவிட்டது.

ரன்அவுட் வாய்ப்பினை ஜடேஜாவே தவறவிடுவதெல்லாம் அதிர்ஷ்டம் குஜராத்தின் பக்கம் என்பதைத் தவிர வேறென்ன சொல்லிவிட முடியும்? ஆனால் கேட்ச் டிராப்களாலும் மிஸ் ஃபீல்டுகளாலும் உண்டான வேகத்தடைகளை டோனியின் மின்னல் வேக ஸ்டம்பிங் தகர்த்தெறிந்தது. கழுகுப் பார்வையுடன் கில்லின் ஸ்டம்பை அவர் காலி செய்ததெல்லாம் டாப் கிளாஸ் கீப்பிங். லென்த்தில் வந்த ஜடேஜாவின் பந்தை ஆட கில் முன்னே செல்ல ஸ்டம்புக்கு மிக அருகே கைகளைக் கொண்டு வந்து பந்தைக் கைப்பற்றி காலதாமதம் ஏற்படாமல் அனிச்சையாகச் செயற்பட்ட அவரது சமயோசிதமும் அதிவேகமும் வெறும் 0.1 விநாடிகளுக்குள் எல்லாவற்றையும் நிகழ்த்தி முடித்தது என்பதுதான் பலராலும் நம்பமுடியாத உண்மை.

கில்லின் விக்கெட்டோடு குஜராத்தின் ரன்ரேட் வேகம் வெகுவாகவே குறையும் என்றோ, ஒன்டவுனில் இறக்கப்பட்ட சாய் சுதர்சனும் மிக மெதுவாகத் தனது இன்னிங்ஸினைக் கட்டமைப்பவர்தான் என்றோ ஆசுவாசப்படுத்த சி.எஸ்.கேவால் முடியவில்லை. தொடர்ந்து ரன்கள் வந்து கொண்டிருந்தன. 12ஆவது ஓவரில் வேகப்பந்துவீச்சு பதிரனாவோடு திரும்பிய கட்டத்தில் இடையில் சற்றுநேரம் சட்டைப்பைக்குள் ஒளித்து வைத்திருந்த மொத்த மொமெண்டத்தை வெளியில் எடுத்தது குஜராத். சற்றே அட்டாக் செய்யத் தொடங்கியவுடன் அரைசதமடித்திருந்த சாஹா ஆட்டமிழந்தார். ஆயினும் மறுபுறம் மத்தளத்தின் இருபுறத்திலும் ஒற்றை ஆளாகவே அடித்து காதினை அதிரச்செய்யும் பேரொலியை சாய் சுதர்சன் எழுப்பத் தொடங்கினார்.

**சென்ற இடமெல்லாம் மஞ்சள் கம்பளம் விரித்து ரசிகர்கள் தந்த அன்புக்கு டோனியும் அவரது படையும் கோப்பையைப் பரிசாகத் திரும்பத் தந்துள்ளனர்..**

33 பந்துகளில் 50 ரன்கள் எடுத்த சாய் அடுத்த 14 பந்துகளில் 46 ரன்கள் அடிப்பாரென எதிர்பார்க்காத சி.எஸ்.கே தள்ளாடிப் போய்விட்டது. பதிரனாவின் இறுதி ஓவரில் அவர் அடித்த இரு சிக்ஸர்கள் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. சதத்தை நெருங்கி 96 ரன்களை நெருங்கி வந்தவர், பதிரனா ஓவரில் அடுத்த பந்தை அடிக்க முயன்று எல்.பி.டபிள்யூ ஆகி இறுதிப்போட்டியில் சதத்தை அடித்த இரண்டாவது இந்தியர் என்ற சாதனையைத் தவறவிட்டார்.

215 ரன்களை 20 ஓவர்களில் எட்ட வேண்டுமெனில் 10.75 ரன்ரேட்டில் ரன்கள் வரவேண்டும். ஓவர்களின் எண்ணிக்கை 15 ஆகக் குறைக்கப்பட்டு 171 ரன்கள் என இலக்கு மாறியதால் அது 11.4 ஆக அதிகரித்திருந்தது. இருப்பினும் கைவசம் உள்ள விக்கெட்டுகள் கடிவாளமின்றி ஓடுவதற்கான உரிமத்தை சி.எஸ்.கேவிற்கு அளித்தன. அதுவும் 4 ஓவர்கள்தான் பவர்பிளேக்கள் என்பதால் ஹிட்டிங் மோடிலேயேதான் ஓப்பனர்கள் ஆரம்பித்தனர். ஷமி மற்றும் பாண்டியாவின் ஓவர்கள் சூறையாடப்பட்டன. ஸ்பின்னைக் கொண்டு இடர்தர, பேரிடர் மீட்பு வீரராக ரஷித் கான் நான்காவது ஓவரை வீசவர 17 ரன்களோடு அவரும் பரிதவிக்கவே வேண்டியிருந்தது.

இலக்கினை நோக்கி மட்டுமல்ல ஒவ்வொரு ஓவரின் முடிவிலும் அடித்திருக்க வேண்டிய டக்வொர்த் லூயிஸ் முறைப்படியிலான ஸ்கோரிலும் சி.எஸ்.கேவின் கவனமிருந்தது. அதைவிட அதிகமாகவே மொத்த ஸ்கோர் இருப்பதை உறுதிசெய்து கொண்டே இருந்தனர். [illegible] அணியாகச் சரணடையவில்லை, சாம்பியன் அணியாக கம்பேக் கொடுத்தது. நூர் அஹ்மத்தின் ஒரே ஓவர் அவர்களை ஆட்டத்தில் திரும்பக் கொண்டு வந்தது. அவரது Wrong'un கெய்க்வாட்டினையும், அவரைவிட அதிக ஸ்ட்ரைக்ரேட்டில் ஆடிக் கொண்டிருந்த கான்வேயினையும் அடுத்தடுத்து வெளியேற்றியது. இருதலைப் பாம்பினால் கொத்தப்பட்டுக் கீழிறங்கிக் கொண்டிருந்த குஜராத்தின் கையில் சிக்கிய ஏணி அந்த "ஒரு ஓவர் - இரு விக்கெட்" திரைக்கதை.

மோஹித் ஷர்மாவினை அட்டாக் செய்து முதல் மூன்று பந்துகளில் 16 ரன்களைக் கொண்டுவந்து சி.எஸ்.கே ரசிகர் களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் அம் பதி ராயுடு. அவரது கரியரின் கடைசி ஆட்டத்தில் அவர் வாழ்நாள் மொத்தத்திற்கும் நினைவுகூரும் வகையிலான ஓர் உணர்ச்சி பூர்வமான கேமியோவினை ஆடினார். ஆனால் அடுத்த இரு பந்துகளில் மொத்த ஸ்டேடியத்தையும் அதிர்ச்சியில் உறைய வைத்தார் மோஹித். அம்பதி ராயுடு மட்டுமல்ல டோனியின் கோல் டன் விக்கெட்டும் அவரால் வீழ்த்தப் பட்டு சி. எஸ்.. கேயின் இரட் டைக் கோபுரம் தகர்க்கப் பட்டது. டோனி ஆட்டமி ழந்தது வலியையும் கோப்பை கைநழுவிய பயத்தையும் ரசிகர்களை ஒருங்கே அனுபவிக்க வைத்தது.

இறுதிஓவரும்மோஹித் தான் வீசப் போகிறார், அதிலும் 13 ரன்கள் வர வேண்டு மென்ற போதே பதற்றம் சி.எஸ்.கேவின் பக்கமே படிந்திருந்தது. துல்லியமான யார்க்கர்களால் போர் தொடுத்து மூன்று ரன்களை மட்டுமே மோஹித் முதல் நான்கு பந்துகளில் கொடுத்திருந்தார். இந்த சீசனின் சிறந்த கம்பேக் வீரர் அவர்தான் ஏன்பதில் மாற்றுக்கருத்தே இல்லை. இரண்டே பந்துகள், பத்து ரன்கள் எனப் பதற்றமும் பிரார்த்தனைகளும் மைதானத்தின் மொத்த வானிலையும் மாற்ற, ஐந்தாவது பந்தும் யார்க்கராக வர அதனை லாங் ஆஃபில் அதி அற்புதமான சிக்ஸராக்கினார் ஜடேஜா. இறுதிப்பந்தில் நான்கு ரன்கள் போதும், ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோப்பைக்கு எனும்போது லோ ஃபுல் டாஸினை ஷார்ட் ஃபைனில் பவுண்டரியாக்கி வெற்றியையும் ஐந்தா வது கோப்பையையும் சி.எஸ்.கேவின் பக்கம் சேர்த்தார் ஜடேஜா.

ஒரு வீரரால் வென்றது என்று இல்லாது மொத்த் பேட்டிங் யூனிட்டும் நின்று இந்த வெற்றியைச் சாத்தியமாக்கி உள்ளது. சென்ற இடமெல்லாம் மஞ்சள் கம்பளம் விரித்து ரசிகர்கள் தந்த அன்புக்கு டோனியும் அவரது படையும் கோப்பையைப் பரிசாகத் திரும்பத் தந்துள்ளனர். குறை களை நிறைகளாக்கும். டோனியின் மந்திரம் தொடர் முழுவதும் அவர்களை மீண்டுவரச் செய்து பெருமைக்குரிய நொடிகளுக்குள்ளும் பயணிக்க வைத்திருக்கிறது.

போன முறை வெளியேறும் போது, அடுத் தாண்டு பிளேஆஃபில் ஆடுவோம் என்று கொடுத்த வாக்குறுதியை மட்டுமல்ல கோப்பை யையும் வென்று ரசிகர்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்தியுள்ளனர் டோனியும் அவரது படையும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளரும் சிறுபயிர்களை வாழவிடுங்கள்



பூத்துக் குலுங்கும் தோப்பாய் மிளிரும்
பெண் மழலைகள் பூப்பறிக்கும்
காலமறியாத இளம் தளிர்கள்
தாயின் பாசத்தில் பிணைந்து வளரும்
பயிர்கள்-சிறுமிகள்

காலந்தனில் கருப்பொருளாய்
கருத்தரித்த சிறு ரோஜா மலர்களே
கண்ணீர் வழிந்து வாடும் நிலை வர விடலாமா?
விந்தை மிகுந்த இவ்வுலகம்
வினைத்திறமையால் மகிழ்வினை ஊட்டும்
விளையாடும் பாவை பருவம்
ஆடி மகளேயெனப் பாடும் வாய்கள்

சந்தனம் மேவிய எழில் வதனம்
சலங்கை மாட்டிய பாதம்
ஓய்விலே முடங்கும் அவலம்
தாய்க்குலமாய் மதித்திடும் பண்பாடு
சிதைந்தது கொடுமை சமுதாயமே
விழிகளை மூடும் பரிதாபம்
சகோதரிகளாகக் கருதும் காலம் இனி வராதோ

துன்பங்கள் வீசும் மாயங்கள்
மறையட்டும் இளைய தலைமுறைகளே
இளைக்க வியக்கவும் விடாது
துணையாய் யாதுமானவளாய்
வளரும் சிறு பயிர்களை வாழ விடுங்கள்.

கவியரசன் K.J. றெக்ஸ்,அக்கராயன்.

## ஓங்கி நீ வளர்வாய் உலகம் வாழ

பணம் கேட்காமல் பயன் தருகின்றாய்
மழை கேட்டுத் தவம் நின்று நீர் தருகின்றாய்
வெயில் தாங்கி நிழலாக எனைக் காக்கின்றாய்
பசி போக்கி பரமானந்த நிலை தருகின்றாய்
கைவண்டியாய் நான் நடக்க கால்களானாய்
வீடாக உருமாறி எனைக் காக்கின்றாய்
விறகாக உணவோடு உரையாடினாய்
கட்டிலாய் நான் உறங்க எனைத் தாங்கினாய்
தள்ளாத வயதினிலே கைத்தடியாக உறவாடினாய்
காலம் முடிந்திடும் எனைத் தாங்கி நீறாகினாய்
மரம் போல வாழ் என்று மறை ஓதுவார்
உனைப் போல் எமைக் காக்க யார் வருவர்
கல்லாத மனம் கொண்டோர் உனை வெட்டுவார்
கருணைக் கடலான சில பேர் உனை நாட்டுவார்
என்றென்றும் ஓங்கி வளர்வாய் உலகம் வாழ



வி. லக்ஸ்மி,
ஆனைப்பந்தி.

## மனையாள்

குடும்ப வாழ்வில் மனையாளின் பங்கு மிக அவசியமே
குடும்ப வண்டி ஓட் சக்கரமாக இருப்பவளும் அவளே
பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க நல்ல
மனையாள் அவசியமே
ஜீவநதியாய் வருவாள் என்றும் எம்மைக் காப்பாள்

துன்பத்தைச் சுமந்து துயர் துடைக்கும் கருவியானாள்
இழப்புக்கள் வரும் போது துயர் துடைக்கும் ஆற்றுநதி ஆனாள்
பிள்ளைகளின் கல்விக்கு அத்திவாரமாகத் திகழ்பவளே
சமூகம் போற்றும் நற்பிரஜையாக உருவாக சிற்பியானாளே

மனையாள் இல்லாத இல்லம் வற்றிய நதி போன்றதே
மூவேளை உணவுதனை முழுமையாகத் தருவாளே
மனையாள் அமைவது இறைவன் கொடுத்த வரமல்லவா
ஆவதும் அவளாலே அழிவதும் அவளாலே-என்பரே



எஸ்.பி.கனா,
தெல்லிப்பழை.

## மௌனத்தின் தேடல்- 671



## வீட்டுக்கு அழகு?

வீட்டு முற்றத்து மாமரம்
தாத்தா காலத்தில் நட்டது
பூவும் பிஞ்சும் காயும் கனியும்
நிறைந்தே நின்று நிழலைத் தந்தது
முற்றத்து மண் வீட்டுக்குள் வருவதால்
மாவைத் தறித்து மாபிள் போட
அப்பா ஏற்பாடு செய்கின்றார்

பி.மதுஷன்.
தையிட்டி.

## வீட்டுத் தோட்டம்

அவப் பொழுதாயினும் தவப்
பொழுதாக்கி கழி -எனும்
வாக்கிற்கிணங்க வீட்டு
வேலைகள்
செய்து முடித்த பின்
நேரத்தை
வீண்விரயமாக்காமல்
வீட்டுத் தோட்டம்
போடுவதில் மகிழ்வுடன்
ஈடுபட்டு விட்டாள் நங்கை.

சி.மகாலட்சுமி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 672



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## பாடம் புரிந்தது

பாடசாலை மரம் நாட்டும் விழா அன்று
எனக்கும் கிடைத்தது ஒரு மரக்கன்று
வீட்டின் மதிலின் அருகே நட்டு
அதற்கு நீரும் பசளையும் இட்டு
ஊட்டி வளர்த்தேன் முகை அரும்பியது
இலையைக் காண உளம் விரும்பியது
வாடகை வாங்க வந்தான் வீட்டுக்காரன்
மதிலின் அருகே என்ன மரம்?
பிடுங்கி எறிந்தான் வேரும் அறுந்தது
வாடகை வீடு பாடம் புரிந்தது.

பி.மதுரசன்.
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## மரமும் மனிதரும்

காடிருந்தால் தான்
நாடு இருக்கும் என்று
நாட்டுப்புற நிலத்தையும்
காட்டுடன் இணைக்கும்
கைங்கரியங்களினின்றும்
கைவிடப்படவில்லை
வாரிசுகளின் நல்வாழ்விற்கும்
பூமித்தாய் பூரிக்கவும்
தரிசு நிலப்பரப்பிலும்
பயன்தரு மரங்களை நாட்டி
காடு தரும் நற்பயன்களை
நாடும் தர வைப்போம்.

க.நாகராசா. நுணாவில்.

## மரம் வளர்ப்போம்

கார்த்திகை மாதம்
மரம் நடுகை திருநாளாம்
ஆளுக்கு ஒரு மரம்
ஆளுமையாய் நாட்டிடுவோம்
சந்ததி செழிப்புறவே
வழி அமைத்திடுவோம்
பூமிப்பந்திக்கு குளிர்ச்சியைத்
தந்திடுமாம்
மனிதனுக்கு நோய்கள்
தீர்க்கும் மருந்தாகும்
பசி போக்கும்
விருந்தாகும்
அடிப்படைத் தேவைகளை
முடிவாக்கும்
மரம் வளர்ப்போம்
பயன் பெறுவோம்

கும்பவாழியான். உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 64

# கடல்புறா

## நான் யார்?

சுமார் பத்தொன்பது ஆண்டுகளாக நீயும் நானும் எத்தனையோ மிகிழ்ச்சியுடனிருந்தோம். அந்த மகிழ்ச்சி மேலும் நீடிக்குமா நீடிக்காதா என்பது நான் சொல்வதைக் கேட்டதும் உன் மனத்தில் விளையக் கூடிய உணர்ச்சிகளைப் பொறுத்தது. ஆம்! நான் சொல்லப் போகும் விஷயம் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடியதுதான்.

அந்த மாற்றம் மகிழ்ச்சியையும் அளிக்கலாம், வெறுப்பையும் அளிக்கலாம்" என்று கூறி விட்டுச் சற்று நிதானித்த அவன், "வெறுப்பை அளிப்பதானால் அதையும் நான் ஏற்கக் கடமைப்பட்டவன். ஒரு தந்தை மகளிடம் பேசக்கூடாத வார்த்தைகளை எப்படிப் பேசினேன் என்று கேட்டாய். பேசினதற்கு உண்மைக் காரணம் தெரியுமா?" என்று கேட்ட பலவர்மன் சரேலெனத் திரும்பி அவளைக் கூர்ந்து நோக்கினான்.

காரணத்தை ஓரளவு அவள் ஊகித்துவிட்டதால் அவள் கண்கள் அவனை வெறித்து நோக்கின. அவள் முகத்தில் ரத்தம் குபீரெனப் பாய்ந்து உணர்ச்சி வெள்ளத்தைக் காட்டின. "உம் தயங்க வேண்டாம். சொல்லுங்கள்." உணர்ச்சி வேகத்தில் வெளிவந்தன அவள் சொற்கள்.

சிரமப்பட்டு பலவர்மன் முகத்தில் பெரும் மாறுதலும் உறுதியும் தாண்டவமாடின. அவன் பதில் கூறிய போது சொற்களும் திடமாகவே உதிர்ந்தன. "நீ என் மகளுமல்ல தான் உனக்குத் தந்தையுமல்ல" என்ற பலவர்மன், ஏதோ பெரும் தியாகத்தைச் செய்தவன் போல் அவளை உற்று நோக்கினான்.

திடீரென திடப்படுத்திக் கொண்ட மஞ்சளழகியின் இதயம் வெடித்து விடும் ஸ்திதிக்கு வந்துவிட்டது. அவன் விஷயத்தை விடுகதையாகத் துவங்கி மெள்ள மெள்ள விவரிக்க முற்பட்டதிலிருந்தே ஏதோ பெரும் ரகசியம் தன் வாழ்வில் புதைந்து கிடக்கிறதென்பதை அவள் ஊகித்துக் கொண்டாளானாலும் அந்த ரகசியம் அத்தனை விபரிதமாக இருக்குமென்று கனவுகூடக் காணாததால், எதிர் பாராத விதமாக வெளிப்பட்ட அந்த விபரீத உண்மை அவள் புத்தியை அடியோடு கலக்கித் தலையைச் சுழல வைக்கலே உட்கார்ந்திருந்த ஆசனத்தை அவன் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

கைகளும் செயலிழந்து போகவே ஆசனத்திலிருந்து விழவும் போனாள் அவள் தலை சுழன்றதையும் அவன் தள்ளாடியதையும் பார்த்த பலவாமன் வெகு வேகத்தில் தாவி அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான் பிறகு குழந்தையைத் தூக்குவது. போய் தன் இரு கைகளிலும் தூக்கிக்கொண்டு சற்று எட்ட இருந்த பஞ்சணையில் அவளைப் படுக்க வைத்துவிட்டு அறைக் காவலரை அழைத்துப் பன்னீரும் விசிறியும் கொண்டுவர உத்தரவிட்டான். பன்னீருடனும் விசிறியுடனும் மஞ்சளழகியின் தோழிமாரும் வந்தனர்.

அவர்களை வெளியே போகச் சொன்ன பலவர்மன் மஞ்சளழகியின் முகத்தில் தானே பன்னீர் தெளித்து விசிறினான். அவன் செய்த சைத்தியோபசாரங்களால் கண் விழித்த மஞ்சளழகி தன் பக்கத்தில் அமர்ந்திருந்த பலவர்மனைக் கண்டு மெள்ளப் புன்னகை புரிந்தாள். அந்தப் புன்னகை பலவர்மன் இதயத்தில் அமுதமெனப் பாய்த்தது.

அத்தனை நாள் அவள் பிறவி ரகசியத்தை மறைத்ததற்காக அவள் தன்னை வெறுப்பாளென்று நினைத்த பலவர்மன அவள் தன்னை வெறுக்கவில்லை யென்பதை அவள் அழகிய அதரங்களில் விளையாடிய புன்னகையிலிருந்து புரிந்துகொண்டதும் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தையே அடைந்துவிட்டதாக எண்ணினான். அந்த எண்ணத்தாலும் சுமார் பத்தொன்பது வருஷ காலம் வளர்ந்த பாசத்தாலும் அவள் குழல்களைக் கோதிவிடவும் செய்தான்.

(தொடரும்...)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 10

அந்தப் பிதாமகனிற்குப் பிறகு அந்த முயற்சியில் முனைந்தவர்கள் புதுக்கவிதைகளை ஓர் இரவல் வெளிச்சத்தில் எழுதி வந்தார்கள்.

மனிதனின் சதைச் சங்கதிகளைப் பற்றிய ஒரு ரகசிய ராஜ்ஜியமாகவே அது நடந்து வந்தது.

தமிழ் லிபியில் அவர்கள் வேறொரு மொழியை எழுதி வந்தார்கள்.



ஃபிராய்டின் இடுப்பில் தொட்டில் கட்டிக் கொண்டு மனிதனின் அந்தரங்க நிமிஷங்களைப் பற்றி அதிகம் பேசினர்.

எனவே புதுக்கவிதை என்பது ஒரு விஷ விஷயம் என்ற எண்ணம் பரவலாகப் படர்ந்தது.

ஒரு குமுஉக் குறிபோல் இருந்த புதுக் கவிதையைப் பத்திரமாகப் பறித்துச் சமூகப்படுத்திய பிறகுதான் புதுக்கவிதை என்பது முதலில் இளைஞர்களின் தேசிய கீதமாயிற்று.

புதுவெள்ளம் புரண்டு வரும் போது கரைகளில் நின்று பார்ப்பவர்கள் முதலில் நுரைகளை ரசிப்பது போல், புதுக்கவிதைப் பிரவாகத்திலும் சில கழிவுநுரைகளே கவனிக்கப்பட்டன.

**"அவள் அழகாயில்லை**
**எனக்குத்**
**தங்கையாகி விட்டாள்."**

### புதுக்கவிதையின் பாடுபொருள்

இது அந்தக் கழிவின் பிரவாகத்தில் மிதந்து வந்த ஓர் அழுக்கு.

**"நேற்றுத் திருமணமான**
**நேப்பாளக் கூர்க்காவுக்கு**
**இன்றுதான் முதற்பகல்!"**

இது அந்த வெள்ளம் அடித்து வந்த இன்னொருசருகு.

வெண்பா என்ற அற்புதமான யாப்பு, சிலேடைக்கும் சிருங்காரத்திற்கும் பயன்பட்ட மாதிரிப் புதுக்கவிதை என்ற பொற்குமிழ் சேற்றைச் சேமிக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தப் புதுக்கவிதைக் காளமேகங்களைத் வாழ்க்கையின் வேர்களைத் துழாவும் பார்வைகளோடும், தாண்டி நாளைகளைத் திறந்து பார்க்கும் தீர்க்க தரிசனங்களோடும். சமூகத்தின் மகிழ்ச்சியில் நிஜமாய் மகிழ்ந்தும், சமூகத்தின் வருத்தத்தில் நிஜமாய் அழுதும், இலக்கணத்தை விட இதயங்களை மதித்தும் எழுதுகிற கவிஞனின் எழுத்துக்களையே புதுக்கவிதையின் சங்கப் பலகை சத்தியமாய் ஏற்கும்.

ஒரு பெரிய தேசத்தின் துருப்பிடித்த இரும்புக் கதவுகளைத் திறந்து விட்டுப் போன மகாத்மா காந்தியின் இலட்சியங்கள் இன்று அலுமாரிகளால் மட்டுமே ஆராதிக்கப்படுகின்றன. இதற்கு ஒரு புதுக்கவிஞன் நிஜமாகவே நெக்குருகுகிறான். அவன் பேனாவிலிருந்து கறுப்புக் கண்ணீர் இறங்குகிறது.

**"அண்ணலே!**
**இன்று உன் ராட்டையில்**
**சிலந்திதான் நூல் நூற்கிறது."**

இங்கு ஒரு நிஜம், கண்ணீர்க்குடம் சுமந்து கலையாகிறது. நாகரிகத்தின் எல்லா விழுதுகளும் இறங்கிய பிறகும் வாழ்க்கை இன்னும் முரண்பட்டே கிடக்கிறது. நெய்தவன் நிர்வாணமாகிறான்.

அறுத்துக் கொடுத்தவன் பசித்துக் கிடக்கிறான். காற்றே மரணமடைந்து விடுவதுபோல இதுவும் சகிக்க முடியாத சங்கதிதான்.

"அவலம"என்று ஒரு கவிதை

**"அவன்**
**விலாவில் எல்லாம்**
**வியர்வை விழுதுகள**
**ஒ!**
**வீதியில் கூவி**
**விசிறி விற்கிறான்!"**

சேஷா சலம்

அடடா!... இந்த வேர்வையில் கண்ணீரின் உப்பல்லவா கரிக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

351

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மனம் அன்புமயமாகி நிற்கும்பொழுது...

மனம் அன்புமயமாகி நிற்கும்பொழுது ஏற்படும் அளவு கடந்த ஆறுதலும் அமைதியும் மனிதனுக்கு பேராற்றலையும், துல்லியமாகச் செயற்படும் திறனையும், நோய்களை எதிர்க்கும் வல்லதையும் வழங்கி நிற்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. இறைவன் அன்பு மயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வ வல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

மனச்சஞ்சலங்களே பல நோய்களுக்கு வித்திடுகின்றன. இந்த மனச் சஞ்சலங்களை அகற்றும் அருமருந்தாய் அன்பு மிளிர்கிறது. எம் மீதும் எமது குடும்பத்தின் மீதும் அன்பு கொள்வோம். எமது சுற்றம், உறவுகள், நண்பர்கள் அனைவரும் மீதும் அன்பு கொள்வோம், ஊர், தேசம், மொழி, கலை, கலாசாரம் அனைத்தின் மீதும் அன்பு கொள்வோம். உலவிவரும் உயிர்களிலும் இயற்கையிலும் அன்பு கொள்வோம். இந்த அன்பினால் ஏற்படும் மன அமைதி உடலின் நோய் எதிர்ப்பு படைபலத்தைப் பெருக்கும்.

ஒருவரை விமர்சித்து மதிப்பிட்டு அவருடன் முரண்பட்டு கோபமுற்று போட்டியிட்டு அவரின் நடத்தைகளை மாற்ற முயன்று வாதிட்டு எமது மன அமைதியையும் நேரத்தையும் மனமகிழ்வையும் விரயமாக்குவது ஆரோக்கியம் ஆகாது. அதற்குப் பதிலாக அவரை அவரது தனித்துவங்களுடனும் குணாதிசயங்களுடனும் ஏற்றுக்கொள்ளக் கூடிய, சேர்த்துக்கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வது பயன்தரும்.

வாதிட்டுப் பேசும் வார்த்தைகளிலும் பார்க்க மௌனங்கள் பலமானவை. பல அர்த்தங்கள் பொதிந்தவை. மௌனங்களும் மன்னிப்புகளும் பலரை சிந்திக்கவைத்து நல்வழிப்படுத்தும்.



எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு வைக்கும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதே சமயம் அது முடியாத விடயமுமல்ல. எம்மைப் பிறர் வெறுப்பதற்குக் காரணம் என்ன? நாம் பிறரை வெறுப்பதற்குக் காரணம் என்ன? எமது எதிரியாக நாம் கருதிக் கொள்பவர்களிடம் புதைந்து கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக் கொள்ள என்ன செய்யலாம்? சிந்திப்போம்.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் அன்புமயமானவர்கள்தான். அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. எம்மைப்பலர் வெறுப்பதற்கும், நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படைக் காரணமாய் இருப்பது என்ன என்பதை நாமே அறிந்து கொள்வது இலகுவான காரியமல்ல. ஆனால் இந்த வெறுப்புணர்வுதான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் முதல் எதிரி என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டி இருக்கிறது.

எதிரியிலும் அன்பு கொண்டு மன்னித்து எமது பாதையைத் தற்காத்து தடம் மாறாது பயணிக்கும் மனத்திடத்தை வளர்த்துக் கொள்வது உடல், உள, சமூக நன்னிலையான, உண்மையான ஆரோக்கியத்துக்கு வழி சமைக்கும்.

கோபமும், வெறுப்பும், பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும், ஆளுமையையும், வளர்ச்சியையும், மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகின்றது. இந்தப் பொது எதிரியானவன் எமது பொன்னான நேரத்தின் பெரும் பகுதியையும் விழுங்கி ஏப்பம் விட்டு விடுகின்றான்.

இந்த எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிப்பது ஒரு இலகு வான போர் அல்ல. பல தடவை கள் நாம் அந்த போரில் தோற்றுவிடுகிறோம். ஆனாலும் இந்தத் தோல்விகள் நிரந்தரமானவையல்ல

அன்பு என்னும் பேராயுதத்தை சரியான முறையில் கையாளக் கற்றுக்கொண்டால் நாம் பல தொற்றா நோய்களையும் வாழ்வின் தடைகளையும் வெற்றி கொண்டு சுகமான விடியலை நோக்கிப் பயணிக்க முடியும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

## நீரிழிவு நாற்பது

1. நீரிழிவோடும் நிமிர்ந்தே நில்லு.
2. பேரழிவு குறைக்கும் பொறுப்பினைக் கையெடு.
3. சீரழிவகற்ற, சீனி தவிர்த்திடு.
4. சீரது பெருக, சிந்தனை மாற்றி வை.
5. உணவை அளந்து உண் - இடை.
6. உண்டி தவிர்.
7. மாப் பொருள் குறை.
8. மரக்கறி விரும்பு.
9. வெள்ளையுணவு விடு - ஊரில்.
10. விளைவதை விரும்பி உண்.
11. கலோரி கணக்கெடு.
12. காலத்திற்கு உணவு உண்.
13. புரதம் போற்றி வாழ்.
14. பொரித்தவை தவிர்.
15. பழங்களில் பாசம் வை.பழரசம் தவிர்.
16. உடல் நிறை பேணு.
17. உடற் பயிற்சி செய்.
18. நடையைக் கூட்டு.
19. நட்டிருத்தல் தவிர்.
20. மதுவை மறந்திடு.
21. புகைத்தலைப் பூட்டு. புகையிலை புறக்கணி.
22. போதை விரும்பேல்.
23. வைத்தியரைப் பார்க்கும், வழக்கத்தைக் கைக்கொள்.
24. மருந்து கைவிடேல் - நேர.
25. மார்க்கம் மறவேல்.
26. சீனியை அளவெடு, சீராகப் பேணு.
27. A1C என்னும், எண்ணைக் கவனி.
28. கண் பரிசோதனை செய்யும், காலத்தைக் கணக்கில் வை.
29. காலினைக் கவனி. பாதணி பற்று. பார்த்து நடந்திடு.
30. புண்கள் தோன்றும், பொழுதிற் கண்டிடக், காலில் கவனம் வை.
31. நகங்களை நறுக்கு.
32. நனைந்தால் உலர்த்திடு.
33. சிறுநீரகம் பேண creatinine அறிந்து வை.
34. சிறுநீரில் புரதப் போக்கினைத் தெரிந்து வை.
35. இதயம் போற்று - கொலெஸ்ட்ரோல்.
36. இலக்கினைப் பேணு.
37. குருதியமுக்கம் குறைத்து வை.
38. குழந்தையாய் மனம் வை.
39. நித்திரைக்கு இடம் கொடு.
40. நிம்மதி தேடு.

**Dr.சிவாணி பத்மராஜா.M.D**
**USA**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும், அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் விவசாய புரட்சியில் களமிறங்கவுள்ள பில்கேட்ஸ் அறக்கட்டளை

(கொழும்பு)

மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் உரிமையாளரான பில் கேட்ஸின் பில்கேட்ஸ் அறக்கட்டளை இலங்கையில் விவசாயத்தை மேம்படுத்த முன்வந்துள்ளதுடன் இதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விவசாயத் துறையில் உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் நோக்கில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தும் மென்பொருளை அறிமுகப்படுத்தி இலங்கையில் விவசாயத்தை அதிகரிக்கும் நோக்கோடு பில்கேட்ஸ் அறக்கட்டளை முன்வந்ததுடன் இதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



அந்தவகையில் இலங்கையில் விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 250 மில்லியன் டொலர்கள் மானியம் பெறப்பட்டுள்ளதுடன், நெல் மற்றும் ஏனைய பயிர்களின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதற்காக விவசாயத் துறையில் தரவுகளை சேகரிப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் அதிகாரிகள் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது இந்தத் திட்டத்திற்கு தமது இணக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

உரப் பாவனையின் மூலம் உற்பத்தித் திறனை நேரடியாகப் பெறுவதற்கும் பெறப்பட்ட உற்பத்தித் திறனைப் பேணுவதற்கும் தேவையான வழிகாட்டல்களை புதிய மென்பொருள் வழங்கும் என ஆரம்பக்கட்ட கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதலாக, பில் கேட்ஸ் அறக்கட்டளை சமூக பாதுகாப்பு அமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதில் உறுதியாக உள்ளது. இது தவிர, நாட்டின் நிதி அமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான துறைகளும் இந்த மென்பொருள் மூலம் டிஜிட்டல் மயமாக்கப்படும். .

மேலும், இது அரசின் கொள்கைகளைத் தயாரிக்க உதவும் என்றும் முதற்கட்ட விவாதத்தில் தெரியவந்துள்ளது.

இந்த செயற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. (4)

# புதிய பாதுகாப்புச் செயலாளராக சாகல ரத்னாயக்க?





(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய பாதுகாப்பமைச்சின் புதிய செயலாளராக சாகல ரத்னாயக்கவை நியமிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தற்போதைய பாதுகாப்பமைச்சின் செயலாளராக ஜெனரல் கமல்குணரத்ன இருக்கும்நிலையில் புதிய பாதுகாப்பமைச்சின் செயலாளராக சாகல நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மேற்கு தொகுதியின் புதிய அமைப்பாளராகவும் ஜனாதிபதி பணியாளர் குழாமின் பிரதானியாகவும் சாகல ரத்நாயக்க தற்போது பணியாற்றி வருகின்றார்.

இந்த வருடம்ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பாக்கப்படும் நிலையில் அதற்கு முன்னதாக அரச நிர்வாக சேவையில் பல மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமே அரசை நிர்வகிக்க வேண்டும்

## சஜித் பிரேமதாச

(கொழும்பு)

மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் அரசை நிர்வகிப்பதே ஒரு நாட்டினது சிறந்த ஆட்சியாளர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். பொசன் பௌர்ணமி தினச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் குற்றங்களை ஒடுக்குவது, நாட்டில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைவது, மதக் கோட்பாடுகளுடன் நாட்டை ஆள்வது ஆகியவை பௌத்த அரசியல் தத்துவத்தில் ஆட்சியாளருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளாகும்.

இவற்றினை ஒரு ஆட்சியாளர் கொண்டிருக்க வேண்டும் என்று பௌத்தம் குறிப்பிடுகிறது. அதெல்லாம் நம் நாட்டுக்கு மஹிந்த தேரரின் வருகையினால் கிடைக்கப் பெற்றதாகும்.

மஹிந்த தேரர் நாட்டிற்கு வந்து பௌத்தத்தை அறிமுகப்படுத்திய போது இலங்கை வரலாறு ஒரு முழுமையான புரட்சிக்கு உட்பட்டது. பஞ்சசீலத்தினால் போதிக்கப்பட்ட அகிம்சையையே தங்கள் வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டு விவசாயத்தின் மூலம் வாழ்வாதாரத்தை வளப்படுத்தினார்கள்.

மஹிந்த தேரரின் வருகையானது இலங்கையின் பௌத்தத்தின் ஆரம்பத்தை மட்டுமன்றி, எமது நாட்டின் தேசிய அடையாளத்தை உறுதிப்படுத்தும் தேசிய கலாசாரத்தின் அறிமுகத்தையும் குறிக்கும் ஒரு சந்தர்ப்பமாக கருதலாம் என தெரிவித்தார். (4)

# காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலை அடுத்த ஆண்டில்

(கொழும்பு)

உத்தேச காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை அடுத்த ஆண்டு ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன உள்ளிட்ட காலநிலை மாற்றம் தொடர்பான செயலக அதிகாரிகளுடன் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுமார் 130 விஞ்ஞானிகளைக் கொண்ட குழுவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அடையாளம் கண்டுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் சர்வதேச தொடர்புகளை இந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளுக்காக பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

இவ்வருட ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் நடைபெற உள்ள இந்நாட்டிற்கு வருமாறு பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச நிபுணர்கள் குழுவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கைசார் கருத்துப் பரிமாறல்களில் ஈடுபடுதல், உலகளாவிய பிரச்சினைகளைப்பற்றி கலந்துரையாடல் மற்றும் கொள்கை கருத்துப் பரிமாற்றங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களை ஆராய்வதும் அவர்களின் வருகையின் நோக்கமாகும்.

உத்தேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளுக்குப் பங்களிக்க கொரிய எக்ஸிம் வங்கியும் தற்போது முன்வந்துள்ளதாகவும் ஹார்வர்ட் மற்றும் எம்.ஐ.டி. (MIT) போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களும் இந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (4)


# கிளிநொச்சி மாவட்ட பேருந்து நிலைய சிற்றுண்டிச்சாலையினை குத்தகை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பேருந்து நிலைய சிற்றுண்டிச்சாலையினை 2023.07.01 தொடக்கம் 2024.06.30 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை 05.06.2023 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 19.06.2023 ஆம் திகதி திங்கட்கிழமை வரை சமுர்த்தி வங்கி அருகாமை, கிளிநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 9.00- பி.ப 11.00 மணி வரை பின்வரும் கொடுப்பனவை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்பு தொகை | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|
| சிற்றுண்டிச் சாலை | 2,500.00 | 10,000.00 | 80,000.00 (மாதாந்தம்) |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி பத்திரங்களை 20.06.2023 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு முன் நேரடியாக மீளளிப்பு தொகையினை செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். குறித்த திகதி, நேரத்தின் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி பத்திரங்கள் யாவும் பெறுகைக்குழு தலைவர், வடமரகண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, சமுர்த்தி வங்கி அருகாமை, கிளிநகர், கிளிநொச்சி என் முகவரியிட்ட தபால் உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை குத்தகை வங்குவதற்கான கேள்வி கோரல்" என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்வி பத்திரங்கள் 2023.06.20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.15 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமூகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி இல்லாத சந்தர்ப்பத்தில் தங்கள் பிரதிநிதியை பங்குகொள்ளக் கூடியவாறு கடிதம் வழங்கி அனுப்ப முடியும். தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,**
**வவுனியா.**

(சி-6666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் விபத்தில் பலியாகிய

# தமிழர்களின் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு



(சென்னை)

ஒடிசா ரயில் விபத்து சம்பவம் ஒட்டு மொத்த தேசத்தையே பெரும் துயரில் ஆழ்த்தி இருக்கிறது. ரெயில் விபத்தில் உயிரிழுந்தோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சம்பவ இடம் முழுக்க இரத்தம், மனித உடல்களின் துண்டிக்கப்பட்ட உறுப்புகள் என்று கோரமாக காட்சியளிக்கிறது. மேலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

விபத்தில் சிக்கி, நூலிழையில் உயிர்பிழைத்தோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்படுகின்றனர்.

இது தொடர்பில் பேசிய தமிழக முதல்வர் முகஸ்டாலின் ரெயில் விபத்தில் உயிரிழந்த தமிழர்கள் குடும்பத்துக்கு ரூ. 5 லட்சம் இழப்பீடும் காயம் அடைந்த தமிழர்களுக்கு ரூ. 1 லட்சம் நிவாரணம் வழங்கப்படும்," என்று தெரிவித்தார். (4)

## உள்நாட்டு போர் காரணமாக

# சூடானில் பட்டினியால் 341 குழந்தைகள் பலி!

(கார்டும்)

**சூடானில் பட்டினியால் 341 குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.**



சூடானில் ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் கடுமையான போர் நடைபெற்று வருகிறது.

இதனால், சூடான் தலைநகர் கார்டும் மற்றும் பிற பகுதிகளில் உள்நாட்டு போர் நடந்து வருவதால் மக்களிடையே அச்சம் நிலவி வருகிறது.

மேலும், கிட்டத்தட்ட இந்த போரில் 1000 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இந்த போரை நிறுத்த வேண்டும் என்று உலக நாடுகள் கோரிக்கை வைத்து வருகிறது. இந் நிலையில், கார்ட்டுமில், அல்-மய்கோமாவில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்தில் தாக்குதல் சம்பவம் நடந்தது.

இதனையடுத்து, அப்பகுதிக்கு வந்து சேர வேண்டிய உணவுகள், அத்தியாவசியப் பொருட்கள் எதுவும் வராததால் பட்டினியால் கடந்த வாரத்தில் மட்டும் 26 குழந்தைகள் உயிரிழந்தனர்.

இது படிப்படியாக உயர்ந்து தற்போது சுமார் 60 குழந்தைகள் உணவு இல்லாமல் உயிரிழந்துள்ளனர். சூடான் முழுவதும் பட்டினியால் சுமார் 341 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (4)

# உக்ரைன் மீது ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை விரிவடைய விட மாட்டோம்- நேட்டோ

புதிய உறுப்பினர்களிற்காக எப்பொழுதும் நேட்டோவின் கதவுகள் திறந்திருக்கும் என்று ஒஸ்லோவில் நேட்டோ வெளியுறவு அமைப்பின் தலைவர் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், உக்ரைனை ஆதரிப்பதிலும், பில்லியன் கணக்கான இராணுவ உதவி மற்றும் பிற உதவிகளை வழங்குவதிலும் நேட்டோ முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைன் வெற்றி பெறுவதை உறுதி செய்யவும், உக்ரைனின் எல்லைகளுக்கு அப்பால் ரஷ்ய இராணுவம் பரவாது தடுப்பதும் நேட்டோவின் மிக முக்கியமான பணி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமன்றி, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு திட்டத்தை அதன் எல்லைகளுக்கு அருகில் விரிவடையாமல் தடுப்போம் என்றும் கூறியுள்ளார். (4)

## ஒடிசா ரயில் விபத்து

# இரத்த தானம் செய்ய குவிந்து வரும் மக்கள்

(டில்லி)

கொல்கத்தாவில் இருந்து சென்னை வந்து கொண்டிருந்த கோரமண்டல் விரைவு ரெயில், ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டம் பஹனாகா ரெயில் நிலையம் அருகே நேற்று இரவு 7 மணியளவில் எதிர்பாராதவிதமாக விபத்துக்குள்ளானது.

அப்போது பெங்களூரில் இருந்து கொல்கத்தா நோக்கி சென்று கொண்டிருந்த யஸ்வந்த்பூர் ஹவுரா விரைவு ரெயில், தடம் புரண்ட ரெயில் பெட்டிகள் மீது மோதி அந்த ரெயிலும் விபத்துக்குள்ளானது.

மேலும், சரக்கு ரெயிலும் இந்த விபத்தில் சிக்கியுள்ளது. இந்த விபத்தில் ரெயிலில் பயணம் செய்த பல பயணிகள் சிக்கி படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து நடந்த பகுதியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர், மாநில பேரிடர் மீட்பு படையினர் மற்றும் தீயணைப்பு வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விபத்தில் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்தக் கோரமான ரெயில் விபத்து காரணமாக ஒடிசாவில் நேற்று மாநில அளவில் ஒரு நாள் துக்கம் அனுசரிக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது பாலசோர் மருத்துவமனையில் ரெயில் விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு ரத்த தானம் செய்ய தன்னார்வலர்கள் குவிந்து வருகின்றனர். ரெயில் விபத்தில் ஏராளமானோர் காயம் அடைந்துள்ள நிலையில் அவர்களுக்கு உதவும் வகையில் ஏராளமான தன்னார்வலர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ரத்தம் வழங்கி உதவி வருகின்றனர். (4)



# மனித உடல் உறுப்புகளுடன் 45 பைகள் கண்டுபிடிப்பு

## மெக்சிகோவில் சம்பவம்

(மெக்சிகோசிட்டி)

மேற்கு மெக்சிகோ, ஜலிஸ்கோ பகுதியில் உள்ள பள்ளத்தாக்கில் மனித உடல் உறுப்புகளுடன் குறைந்தது 45 பைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மே மாதம் 20 ஆம் திகதி முதல் காணாமல் போன 30 வயது மதிக்கத்தக்க இரண்டு பெண்கள் மற்றும் ஐந்து ஆண்கள் என 7 பேரை தேடும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுவந்தனர்.

இவர்கள் 7 பேரும் வெவ்வேறு நாட்களில் காணாமல் போனதும், ஆனால் இவர்கள் 5 பேரும் ஒரே கால் சென்டர் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தது புலனாய்வு விசாரணையில் தெரியவந்தது.

இந்நிலையில், பெரிய தொழில்துறை மையமான குவாடலஜாராவின் புறநகர்ப் பகுதியில் ஜபோபன் நகராட்சியில் 40 மீற்றர் பள்ளத்தாக்கின் அடிப் பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை அன்று மனித உடல் உறுப்புகள் கொண்ட 45 பைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது குறித்து பொலிஸ் அதிகாரிகள் கூறுகையில், 45 பைகளில் ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் சொந்தமான மனித உடல் உறுப்புகள் இருந்தன. தடயவியல் நிபுணர்கள் மனித உறுப்புகளின் அடையாளங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். ஆனால், இவை கண்டுபிடிக்கப்பட்ட அதே பகுதியில் தான் சம்பந்தப்பட்ட கால் சென்டரும் இயங்கி வருகிறது.

இதன் முதற்கட்ட விசாரணையில், கால் சென்டர் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் என தெரிகிறது. மேலும், இதுதொடர்பான முக்கிய ஆவணங்களையும் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகளாக மாற்ற கால் சென்டர் நிறுவன அதிகாரிகள் முயல்வதாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளார். மேற் கொண்டு விசாரணை நடத்தி வருகிறோம் என தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் தமிழ் உறவுகளின் மற்றுமொரு தார்மீகப் பொறுப்பு

யுத்த காலத்திலும் சரி, யுத்தத்துக்குப் பின்பான பொருளாதார நெருக்கடி காலத்திலும் சரி தமிழ் மக்கள் நின்று பிடிப்பதற்கு மூலகாரணம் நம் புலம்பெயர் உறவுகள் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், இந்த நாட்டில் வாழ முடியாத சூழ்நிலையில் வெளிநாடுகளுக்குச் சென்ற நம் உறவுகள் தங்கள் தாயகத்தை ஒருபோதும் மறக்கவில்லை.

அவர்களின் கனவிலும் நனவிலும் நம் நினைப்பே இருந்தது.

தங்கள் வியர்வையைச் சிந்தி கடினமாக உழைத்த அவர்கள்; தங்கள் தாயக மக்களையும் தாயகத்திலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது அமைப்புகள் மீதும் தீராப் பற்றுக் கொண்டிருந்தனர்.

அதனால் தங்களின் உழைப்பின் பெரும் பகுதியை தாயகத்துக்கு அனுப்பி வைத்தனர். இது எமது மக்களின் பொருளாதாரத்தை தக்கவைத்தது.

தவிர, தாம் தாம் படித்த பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதிலும் அங்கு கற்கின்ற மாணவர்களுக்கு வசதிகளையும் வளங்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதிலும் நம் புலம்பெயர் உறவுகள் செய்த – செய்கின்ற உதவிகள் காலத்தால் மறக்க முடியாதவை.

இவற்றையும் கடந்து நம் வாழ்வியலோடும் பண்பாட்டோடும் இரண்டறக் கலந்து விட்ட ஆலயங்கள் மீதும் இறைவழிபாட்டின் மீதும் நம்புலம்பெயர்உறவுகள்கொண்டுள்ளபற்றும்பாசமும் நம்பிக்கையும் அளவிட முடியாதவை.

அதன் காரணமாக எங்கள் மண்ணில் உயர்ந்து நிற்கின்ற இராஜகோபுரங்கள் ஆலயங்களின் வனப்புக்கள், திருவிழாக்களின் எழுச்சிகள் என அனைத்துக்கும் மூலமாய் இருப்பது புலம்பெயர் தமிழர்கள் என்பதை உரக்கக் கூறமுடியும்.

ஆக, யுத்தப் பாதிப்புகள் ஏற்பட்டபோதிலும் புலம்பெயர்வு காரணமாக ஏற்பட்ட வெளிநாட்டுத் தொடர்புகள் எம் இனம் வாழ்வதற்கு மிகப்பெரும் பலமாக அமைந்துள்ளது.

குறிப்பாக எங்கள் புலம்பெயர் உறவுகள் வெளிநாடுகளில் கல்வி, பொருளாதாரம், அரசியல், அறிவியல் ஆகிய தளங்களில் பலமுடையவர்களாக விளங்குகின்றனர்.

அதிலும் குறிப்பாக வெளிநாட்டு அரசியலில் நம் புலம்பெயர் உறவுகள் கொண்டுள்ள வகிபாகம் சாதாரணமானதன்று.

எனினும் நம் தாயகத்துடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்த எம் புலம்பெயர் தமிழ் உறவுகளின் பிள்ளைகளுக்கும் எமக்குமான எதிர்காலத் தொடர்பு நீடிக்குமா? நிலைக்குமா? என்ற ஏக்கம் இருக்கவே செய்கிறது.

இந்த மனக்குறை நிவர்த்திக்கப்படக் கூடிய வகையில் சமகால சூழல் களம் அமைத்துள்ளது.

அதாவது வேலைவாய்ப்பு மற்றும் உயர் படிப்பு என்றவகையில் வெளிநாடுகளுக்குச் சென்று வரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இங்கிருக்கக்கூடிய நம் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு வரவழைக்கின்ற தார்மீகக் கடமையை நம் புலம்பெயர் உறவுகள் செய்தாக வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் ஏலவே குறிப்பிட்ட மனக்குறைக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும்.

# கஜேந்திரகுமார் மீதான கொலை முயற்சி இனவெறி இலங்கை அரசின் சதிச்செயலே

## சீமான் கோபாவேசம்

(சென்னை)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான படுகொலை முயற்சி இலங்கை அரசின் இனவாத கோரமுகத்தின் மற்றொரு வெளிப்பாடு என சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரை சுட்டுப் படுகொலை செய்வதற்கு இலங்கை புலனாய்வுத்துறையினர் முயன்றுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இருப்பையும் திரைமறைவில் அழித்தொழிக்கும் இலங்கை இனவெறி அரசின் சதிச்செயலே இக்கொலை முயற்சி நிகழ்வு என்றும் சாடியுள்ளார்.

தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவெறி அடக்குமுறைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதை இந்த சம்பவம் மூலமாவது பன்னாட்டுச்சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதேநேரம் அரசியல் உரிமையைப் பெற்றிட கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து பொது வாக்கெடுப்பு கோரும் தீர்மானத்தை ஐ.நா. மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றிட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (4-7)

ஐ.நா பொதுச் சபையின்

## 78 ஆவது கூட்டத் தொடரின் துணைத் தலைமை பொறுப்பில் இலங்கை

(வோஷிங்டன்)

ஐ.நா பொதுச் சபையின் 78வது கூட்டத் தொடரின் துணைத் தலைவர்களாக ஆசிய-பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி 2023 செப்டெம்பர் முதல் 2024 செப்டெம்பர் வரை ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சார்பாக இலங்கை இந்த முக்கியமான பதவியை ஏற்றுக்கொள்கின்றது.

ஆபிரிக்கா சார்பாக காங்கோ, காம்பியா, மொராக்கோ, செனகல், உகண்டா, சம்பியாவும் ஆசியா பசிபிக் நாடுகளுக்கு ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, உஸ்பெகிஸ்தானும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கிழக்கு ஐரோப்பியாவிற்கு எஸ்டோனியாவும், லத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் தீவுகளுக்கு பொலிவியாவின் ப்ளூரினேஷனல் ஸ்டேட், சுரினாம் போன்ற நாடுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஐ.நா. பொதுச் சபையின் 78வது அமர்விற்கு துணைத் தலைவர்களாக மேற்கு ஐரோப்பிய மற்றும் பிற மாநிலங்களுக்கு ஐஸ்லாந்து, நெதர்லாந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத்தலைமை நாடுகள், ஐ.நா.பாதுகாப்பு சபையின் வீட்டோ அதிகாரம் கொண்ட ஐந்து நிரந்தர உறுப்பு சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரித்தானியா மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## பொன். சிவகுமாரனின் நினைவேந்தல் நாளை

தியாகி பொன். சிவகுமாரனின் நினைவேந்தலின் போது அர்சியல் கட்சிகள் எவ்வித அரசியல் பேதமுமின்றி பங்கேற்க வேண்டுமென நினைவேந்தல் குழு அழைப்பு விடுத்துள்ளது.

தியாகி பொன். சிவகுமாரின் 49வது ஆண்டு நினைவேந்தல் நாளை இடம்பெறவுள்ள நிலையில் அது தொடர்பான ஊடக சந்திப்பு நினைவேந்தல் குழுவினரால் நேற்று நடாத்தப்பட்டது.

நினைவேந்தல் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கும் போது, தியாகி பொன். சிவகுமாரனின் 49 ஆவது நினைவேந்தல் நாளை யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் அனுஷ்டிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நினைவேந்தலில் அரசியல் கட்சிகள் அரசியல் பேதமின்றி பங்கேற்க வேண்டும். மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் நினைவேந்தல் இடத்திற்கு வந்து அஞ்சலியை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## இந்திய ரயில் விபத்து ஜனாதிபதி ரணில் இரங்கல்

(கொழும்பு)

இந்தியாவின் கிழக்கு ஒடிசா மாநிலத்தில் ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானமை தொடர்பில் கேள்வியுற்று மிகுந்த கவலை அடைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில்,

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேநேரம் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

எதிர்பாராத விதமாக விபத்துக்கு முகம்கொடுத்துள்ள இந்திய அரசாங்கத்திற்கு வலிமையும், தைரியமும் கிட்ட வேண்டுமென பிரார்த்திப்பதாகவும் துயரமான இந்த தருணத்தில் அயல் நாட்டவர்கள் என்ற வகையில் இலங்கை அரசாங்கமும் மக்களும் இந்தியாவுடன் கைகோர்த்து நிற்போம் எனவும் உறுதியளித்துள்ளார். (4-7)

## வங்கி அட்டை திருடி தங்காபரணம் கொள்வனவு இளம் யுவதி கைது

(வவுனியா)

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய பெண் ஒருவரின் டெபிட் கார்ட்டை திருடி, அந்த அட்டையை பயன்படுத்தி தங்க நகைகளை கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் 24 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த யுவதி கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான யுவதி கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

குறித்த யுவதி வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள தனது உறவினரின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கு டெபிட் கார்ட்டை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 2 வளையல்கள், ஒரு சங்கிலி மற்றும் 2 காதணிகளை மீட்டுள்ளதுடன், பல தங்க நகைகளை அடகு வைத்தமைக்கான பற்றுச்சீட்டு ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(4,7,250)

## யாழில் இராணுவ அதிகாரி மீது கண்ணாடி போத்தலால் தாக்குதல்

விடுமுறையில் வீடு செல்வதற்காக யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் காத்திருந்த இராணுவ அதிகாரி மீது கண்ணாடி போத்தலால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கோப்பாய் இராணுவ முகாமில் பணியாற்றும் ரணசிங்க என்ற அதிகாரி மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த இராணுவ அதிகாரி பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப் பாவனையாளர்களை கட்டுப்படுத்த

# ஆசிரியர்கள், பெற்றோர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

### வடக்கு பதில் சுகாதார பணிப்பாளர்

(கண்டாவளை)

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளில் அதிககரிசனை செலுத்தி போதைப் பொருள்பாவனையை தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென வடமாகாண பதில்சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து குறிப்பிடுகையில், கடந்தவருடம்ஹெரோயின் மற்றும் ஐஸ் போதை பொருள்களால் பத்து பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக வடபகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களால் போதை பொருட்கள் கொண்டுவரப்படுகிறன.

அதை திடீரென தடுக்க முடியாது. ஆனாலும் போதைப் பொருள் பாவனைகளை குறைக்க வேண்டும். குறிப்பாக பெற்றோர்களும் பாடசாலைகளில் ஆசிரியர்களும் அதிக கரிசனை செலுத்தி போதைப் பொருள் பாவனையாளர்களை குறைக்க வேண்டும்.

பாவனையாளர்களை குறைக்காத வரையும் வேறு வழிகளில் கட்டுப்பாடுகளை போடுவதன் மூலம் அவை வேறு வடிவங்களில் மிக கூடிய விரைவில் இந்த இடங்களில் கிடைத்து விடும்.

இது உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாகும். இது தொடரவே போகின்றது. குறிப்பாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் இளமைக் காலத்தில் அதாவது 16 வயது தொடக்கம் 26 வயது வரையானவயதெல்லைகளை கொண்டவர்களே அதிகளவில் இவ்வாறான பிரச்சினைக்குரியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆகவே இந்த வயதெல்லை உடையவர்களை மிகவும் அவதானமாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக பெற்றோர்களும் பாடசாலைகளில் ஆசிரியர்களும் பிள்ளைகளில் அதிக கரிசனை செலுத்தி போதைப் பொருள் பாவனையை தடுக்க முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-315)



யாழ்ப்பாணம்-சுதுமலையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்: கஜிந்தன்)

# வவுனியா சிறையிலிருந்து ஐந்து பேர் விடுதலை

(கொழும்பு)

பொசன் தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் இருந்த ஐவர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தத் தவறியவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் சீ.இந்திரகுமார் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (4)

# மக்கள் பிரதிநிதிகளுக்கே இந்நிலை என்றால் மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்

### சந்திரகுமார் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் நாட்டில் தமிழ் மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதனை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் நாட்டில் சுதந்திரமாக செயற்பட முடியாத ஜனநாயக சூழல் காணப்படுகிறது என்றால் அப்பாவி தமிழ் மக்களின் நிலைமையை எண்ணிப்பாருங்கள்? அவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதனை சிந்தித்து பாருங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கேட்டறிவதற்கு கூட ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் சுதந்திரம் இல்லாத நிலைமை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியான கண்காணிப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பன தமிழ் மக்கள் மீது யுத்தம் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்தும் இடம் பெற்று வருகிறது. இது இனங்களின் நல்லிணக்கத்திற்கும் நிலையான சமாதானத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையே குரோதத்தை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே செல்லும்.

எனவே இச்சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் மற்றும் அவரது செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)



வெசாக் பொசன் பண்டிகையை முன்னிட்டு பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 300 |
| தக்காளி | 350 | 250 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 |
| கோவா | 450 | 400 | 400 |
| கரட் | 260 | 380 | 450 |
| பூசணி | 100 | 80 | 100 |
| புடோல் | 240 | 180 | 320 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 450 | 400 | 600 |
| வெண்டக்காய் | 220 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 |
| பயற்றங்காய் | 450 | 350 | 300 |
| லீக்ஸ் | 360 | 380 | 450 |
| பீற்றூட் | 480 | 400 | 500 |
| கறிமிளகாய் | 400 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 240 |
| கீரை – 1 பிடி | 140 | 70 | 100 |
| தேசிக்காய் | 350 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 550 | 450 | 700 |
| முள்ளங்கி | 200 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 50 |
| ஈரப்பலா | 120 | 150 | 200 |

# மக்களின் நுகர்வு குறைவடைந்தமையே பணவீக்கம் குறையக் காரணம்

### ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

இலங்கையில் நுகர்வு குறைக்கப்பட்டதன் காரணமாகவே பணவீக்கம் குறைந்துள்ளது. இதனை தவிர பொருளாதார சாதனை அல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழன் அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் முன்னோக்கி செல்லும் வழிகள் குறித்தும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பணவீக்கம் 70 வீதத்தில் இருந்து 22.5 வீதமாக குறைவடைந்துள்ளதாக ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் நுகர்வு குறைந்ததன் காரணமாகவே பணவீக்கம் 22.5 சதவீதமாக குறைந்துள்ளது என ராஜகருண குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் இருப்பவர்களில் சிலர் முதலீட்டாளர்களிடம் தரகுப்பணம் கேட்டு முதலீட்டை சீர்குலைக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் அரசாங்கம் எவ்வாறு நான்கு தூண்களில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பப் போகிறது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை அரசாங்கம் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நோக்கில், உத்தேச ஒலிபரப்பு ஆணையக யோசனையை கொண்டு வருகிறது.

இதன் மூலம் அரசாங்கம் விரும்புகின்ற செய்திகளை மாத்திரமே ஊடகங்கள் வெளிக்கொணர முடியும் என்பதுடன் ஊடகச் சுதந்திரம் நசுக்கப்படும் என்றும் ஹர்சன ராஜகருண சுட்டிக்காட்டியுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ...

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது 12.5 கிலோ லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 3,638 ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## தையிட்டி...

களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், ஊடக பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-7,104)

## படகு மோதி...

ராட்சி கிழக்கு, குடாரப்பு பகுதியில் வாடி அமைத்து கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கடந்த மாதம் 25ஆம் திகதி தொழிலுக்கு சென்றவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கரை திரும்பிய போது படகுகள் இரண்டிற்கு இடையில் அவர் அகப்பட்டு உள்காயம் ஏற்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (4-7,60)

## பெற்றோரின்...

சங்கானையில் நேற்று முன்தினம் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் வன்முறைகளில் இருந்து அவர்களைக் காப்பற்ற முடியும்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாகவே உள்ளன. இவ்வாறான சம்பவங்களை நாங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்தபோது, அவற்றில் 80 வீதமானவை பெற்றோரின் முறையான கண்காணிப்பு இல்லாத காரணத்தாலும், சிறுவர்கள் மீதான அக்கறையின்மையினாலுமே இடம்பெற்றுள்ளன.

இவற்றைத் தடுப்பதில் நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். சட்டத்தை உருவாக்குபவர்கள், அரசாங்க அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பங்குண்டு. அத்துடன் ஊடகங்களுக்கும் பெரும்பங்கு உண்டு. எனவேநாம்அனைவரும் ஒன்றாகி ஒளியேற்ற முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

## துணைவேந்தர்...

பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

அதற்கான இறுதித் தினம் நேற்று முன்தினம் 02ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணியுடன் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் நிறைவடைந்த வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மூவரும் கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ.கண்ணதாசன் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்தும், விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபா கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய எதிர்வரும் ஜூலை மாத முற்பகுதியில் நடத்தப்படவுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் முன்னிலையில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று பெயர்களைப் பெறுபவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக்கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து துணைவேந்தராக ஜனாதிபதி பிரகடனம் செய்வார். (4-7,33)

## கிளிநொச்சியில்...

ஷெல்கள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட ஷெல்கள் சிறப்பு அதிரடி படையினரால் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-7,316)

## தேர்தலை...

நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டம் மற்றும் ஒழுங்கு, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருப்பதால் நெருக்கடியிலிருந்து இலங்கை முற்றாக மீண்டுவிட்டது என்று கருத முடியாதென வலியுறுத்திய ஜனாதிபதி இந்தச் செயன்முறையின் வெற்றிக்கு எதிர்காலத்தில் பாரிய அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்தார்.

கடந்த பத்து மாதங்களுக்குமுன்பாக இலங்கை முன்னொருபோதும் காணாத பொருளாதார நெருக்கடியைக் கண்டதென தெரிவித்த ஜனாதிபதி, அந்த நெருக்கடியிலிருந்த மீண்டு வருவதற்கான முயற்சிகளை தாம் உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்திருந்தமையையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மேலும்உரையாற்றுகையில்,

முன்னொருபோதும் காணாத வகையிலான சவாலை இந்நாட்டின் பொருளாதாரம் கடந்த பத்து மாதங்களுக்கு முன்பாக கண்டிருந்தது. இருப்பினும் சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்திருந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீண்டுவிட்டதென கூற முடியாது.

தற்போதும் பெரும்பாலான பொதுமக்கள் தேர்தல் மற்றும் அரசியல் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர்.

பாராளுமன்றம், நீதிமன்றம், ஊடகம், தனியார் துறை, தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், நமது நாட்டின் பொதுமக்கள் மற்றும் அரச நிர்வாக கட்டமைப்பு மீதான நம்பிக்கையை முற்றாக இழந்துள்ளனர் என்று ஜனாதிபதி தெரிவித்தார். (4-7)

## எரிபொருள்...

மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடந்த வாரத்தில் எரிபொருள் கையிருப்பு குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மதிப்பாய்வு செய்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 121 எரிபொருள் நிலையங்கள் மே மாதம் 27 முதல் 31 வரை எந்த ஓடரையும் செய்யவில்லை என்றும் மேலும் பல எரிபொருள் நிலையங்கள் குறைந்தபட்ச கையிருப்புகளை பராமரிக்க போதுமான ஓடர்களை வழங்க வில்லை என்றும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1589
வெற்றி இலக்கங்கள்
கடகம் 7 1 5 8 8 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1164
K 11 20 43 60
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.03
சீட்டிழுப்பு இலக்கம் 3376
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Y 15 42 60 62
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1482
P 03 07 46 47 56

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.03
சீட்டிழுப்பு இலக்கம் 443
சிம்மம் 01 22 36 49 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/03
சீட்டிழுப்பு இலக்கம் 5134
0 5 7 7 6 9 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2108 | நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.06.03 | தினம் சனிக்கிழமை
D 31 70 71 77
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 1,730,380/-
DLB www.dlb.lk

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.03
வெற்றி வாரம்: 4269
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 48,667,050.90
வெற்றி இலக்கங்கள் 04 21 24 44
ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,926,538.80
வெற்றி இலக்கங்கள் 29 42 48 52
துலாம்
திகதி 2023-06-03
வெற்றி வாரம் 3820
வர்ணம் இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,504,780/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 18 21 29 49 57
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 334,899,413.80
சீட்டிழுப்பு வாரம் 1284
சிவப்பு
2023.06.03 சனிக்கிழமை
DLB DEVELOPMENT LOTTERIES
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 599 | திகதி 2023-06-03 | வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கங்கள் 01 42 50 | விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,382,000.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அட கோடீபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 1934
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.50,972,911/-
வெற்றி இலக்கங்கள் 21 31 53 63
ஆங்கில எழுத்து P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரத்தில் சிக்கி இளைஞன் பலி

ஆடைத் தொழிற்சாலையில் திடீரென இயங்கிய இயந்திரத்தில் இளைஞனின் தலை சிக்கியதில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வஸ்கடுவ பொக்குணவட்ட வீதியில் அமைந்துள்ள ஆடை உற்பத்தி நிலையம் ஒன்றில் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7)


## கட்டடம் வாடகைக்கு

கால்நடை வைத்திய சேவை செய்வதற்கு கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு (15836)

**077 260 5665**

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் இயங்கும் Village Hotel and indian Restaurant இற்கு

- Marketing Manager
- Waitress

அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை.

(15800) **076 830 3931**

## வீடு வாடகைக்கு வழங்கப்படும்

சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள வீடு வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு (15839)

**077 645 3862**

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகர் மத்தியில் இயங்கும் Fancy Shop ஒன்றிற்கு பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை.

Contact Number (15825)

**076 129 7435**

## சமையல் வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு (கொத்து,ரைஸ்), தயாரிப்பவர் உடன்தேவை.

தங்குமிடவசதி உண்டு.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.. (15834)

**077 629 0894**
**072 629 0891**

## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6668)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## அமெரிக்க லொத்தர் விசா

**V2 TRAVELS**

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.



அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

(C-6668)

**0768226240 / 0768226241**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- வட்டுக்கோட்டை மாவடி சந்தியில் இருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில் (உபவில் வீதி பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 786 வழி இலக்க தனியார் CTB பேருந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200m தூரத்தில்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- மாவடி சந்தியில் இருந்து 800m தூரத்தில். (15841)

**076 739 0413**
**076 733 6093**

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசவீதி சந்திக்கு அண்மித்து உள்ள கிருஸ்ணன் கோவிலுக்கு மேற்கு புறமாக மானிப்பாய் வீதியிலிருந்து வடக்கே 20 மீற்றர் தூரத்தில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.

- நல்ல நீர் ஊற்று உள்ள கிணறு மற்றும் காய்க்கும் 7 தென்னை மரங்கள் உள்ள இடம்.
- வீடுகட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் வியாபார நோக்கத்திற்கும் உகந்த இடம். (15832)

**077 310 1357**

## காணி விற்பனைக்கு

யாழ் நகரில் மகாத்மா காந்தி வீதியில் (மணிக்கூட்டு வீதி) 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (15837)

**077 751 2299**
**076 690 8967**

## தவறிவிட்டது

ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நாகலிங்கம் இராசதுரை என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (651931479V), Job Card, ATM Card அடங்கிய போ்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (15834)

**077 081 7147**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு கீழ்வரும் வேலைகளிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் திங்கள் முதல் புதன் வரை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை சுயவிபரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

1. Computer Billing (ஆண்/பெண்)
2. பில் கட்டி கொடுப்பதற்கு (ஆண்)
3. Delivery செய்வதற்கு (ஆண்)

விநாயகர் ஸ்ரோஸ்
424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**077 419 5015** (15828)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(15768)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## பெண் பணியாளர் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு சிட்டை எழுதுனர், பார்சல் தயாரித்தல், கணக்கு எழுதுனர், கணனி இயக்குனர், அலுவலக உதவி ஆகிய பணிகளுக்கு பெண் பணியாளர் தேவை. (வயதெல்லை 18 - 35 வரை. யாழ். நகரிலிருந்து 5Km உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை) (15818)

**077 122 8841, 075 881 0010**




## SB Travels and Tours Pvt Ltd (IATA AGENT)

சகல நாடுகளிற்கான நேரடி விமான பயணச் சீட்டுக்கள் Travels itinerary, Insurance, India, malasiya, Dubai, Bangkok விசாக்களும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிற்கான visa form பூர்த்தி செய்து தரப்படும். Appointment எடுத்துத்தரப்படும்.

தற்போது Colombo to Chennai to Colombo 53,000/=

(Special fare offers for Canada, U.K, Paris, Doha, Dubai)

Hotline : 075 555 9932

No.198, Kasthuriyar Road, Jaffna. 021 222 8555, 076 691 1082, 83
No41, Ginthupitiya street, Colombo.- 13
011 233 3322, 076 691 1089
No.324, Aluthmawatha Road, Colombo -15
011 254 0280, 077 108 3481
(C-6667)

Email : sbtravels99@yahoo.com

## முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 04.06.2022 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த சிவகுரு ஆதீன செயலாளர்

**அமரர் செல்வி ஓங்காரரூபி சண்முகநாதன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் ஆனி மாதம் 4 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம் பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிக்கிறோம்.

692, பருத்தித்துறை வீதி, நல்லூர். (15805)

சிவகுரு ஆதீனம்
077 222 0103


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.